# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023–2024

### மானியக் கோரிக்கை எண். 36


## முனைவர் பழனிவேல் தியாக ராஜன்

நிதி மற்றும் மனிதவள
மேலாண்மைத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2023

# பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | முக்கிய நடவடிக்கைகள் | 4 |
| 3. | துறையின் செயல்பாடுகள் | 8 |
| 4. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | 8 |
| 5. | ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுப்பது | 24 |
| 6. | சிறப்பு முயற்சிகள் | 32 |
| 7. | இருபது அம்சத் திட்டம், 2006 | 33 |
| 8. | முக்கிய பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள் | 34 |
| 9. | துறைத் தலைவர்கள் | 35 |
| 10. | மாநில திட்டக்குழு | 37 |
| 11. | பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை | 71 |
| 12. | மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை | 124 |
| 13. | சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 131 |
| 14. | சென்னை மெட்ரோ இரயில் திட்டம் | 134 |

## மானியக் கோரிக்கை எண்.36
## திட்டம், வளர்ச்சி மற்றும்
## சிறப்பு முயற்சிகள் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை**

**“ தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல். ”**

***(திருக்குறள் 462)***

மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்காகவும், மாநிலத் திட்டச் செலவினங்கள், இருபது அம்சத் திட்டம், ஒன்றிய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்வதற்காகவும் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையானது ஆரம்ப கால கட்டத்தில் உருவாக்கப்பட்டது. மத்திய திட்டக் குழு கலைக்கப்பட்டு, வரவு செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, இத்துறையின் செயல்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாட்டில் வளர்ச்சி சார்ந்த திட்டங்களுக்கான நீண்டகால செயல் உத்திகள் அடிப்படையில் இலக்கு நிர்ணயித்தல், இடைப்பட்ட காலங்களில் செயல்படுத்த தேவையான வளர்ச்சி சார்ந்த திட்டங்களை முன்னிலைப்படுத்தல் மற்றும் அம்முயற்சிகளில்

கொள்கை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல் ஆகியன இத்துறையின் பணிகளாக நிர்ணயிக்கப்பட்டன. இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் மாநிலத் திட்டக் குழு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளிலுள்ள வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை பயன்படுத்தி, பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து, மாநிலத்தில் முழுமையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான கொள்கைகளை இத்துறை வகுக்கிறது. மேலும், மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்ட புதிய அமைப்பான நித்தி ஆயோக் (NITI Aayog) உடன் கலந்துரையாடும் மாநில அரசின் ஒருங்கிணைப்புத் துறையாகவும் மற்றும் ஒன்றிய அரசுடனான பல்வேறு தொடர்புகளுக்கான தமிழ்நாடு அரசின் ஒருங்கிணைப்புத் துறையாகவும் இத்துறை செயல்படுகிறது.

மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக நித்தி ஆயோக் (NITI Aayog) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் முதன்மையான நோக்கமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், ஒன்றிய மற்றும் மாநில அளவிலான திட்ட அமைப்புகளின் திட்டங்களை தயாரித்தல் மற்றும் செலவினங்களை கண்காணித்தல் ஆகிய செயல்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு,

அரசின் கொள்கை முடிவுகள் மற்றும் வெளியீடுகள் அடைப்படையில் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளின் கவனம் செலுத்தப்படுகிறது.. மேலும், சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களை உள்ளடக்கிய, 'நாம் விரும்பும் எதிர்காலத்தை' நோக்கி செயல்படும், பிரபஞ்ச வெளிப்பாடுடன்கூடிய, உலகளாவிய தரத்திதிலான நீடித்த வளர்ச்சி இலக்குகளில் கவனம் செலுத்துவதாக இத்துறையின் செயல்பாடுகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இத்துடன், நீடித்த வளர்ச்சி இலக்கினை அடைவதற்கான சிந்தனை மற்றும் முன்னேற்றத்தை அனைத்து துறைகளுடன் ஒருங்கிணைந்து இத்துறை கண்காணிக்கிறது.

இ-சமிக்ஷா மற்றும் பிரகதி (PRAGATI - Pro-Active Governance and Timely Implementation) வலைதளம் வாயிலாக நித்தி ஆயோக் (NITI Aayog) மற்றும் ஒன்றிய அரசுடன் ஒருங்கிணைந்து கலந்துரையாடும் மாநில அரசின் முகமைத் துறையாக இத்துறை செயல்படுகிறது. பிரகதி வலைதளம் வாயிலாக, மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள், ஒன்றிய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளுடன் உயர் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் முன்னோடி திட்டங்கள் குறித்து நேரடியாக விவாதித்து அறிந்து கொள்கிறார். மேலும், பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்படும் திட்டங்கள் குறித்த தற்போதைய நிலை பிரகதியின்

(PRAGATI) வலைதளத்தில் இத்துறையால் தொடர்ந்து பதிவேற்றம் செய்யப்படுகிறது.

மேலும், சிறப்பு முயற்சிகள் திட்டத்தின்கீழ் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

துறையின் வலைதளமான www.tn.gov.in/department/23-இல் இத்துறையின் செயல்பாடுகள் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

**1.0 முக்கிய நடவடிக்கைகள்**

i. மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்டுள்ள நித்தி ஆயோக் (NITI Aayog) அமைப்புடன் ஒன்றிய அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்;
ii. நீண்ட மற்றும் நடுத்தர கால செயல் உத்திகளை மாநில திட்டக் குழு மூலமாக வகுத்தல்;
iii. மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலமாக பொருளாதார மற்றும் சமூக காரணிகளின் அடிப்படையில் மாநிலத்தின் சீரான வளர்ச்சியை உறுதி செய்தல்;

iv. தமிழ்நாடு புத்தாக்க முயற்சியின்கீழ் திட்டங்களைப் பரிந்துரை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல்;

v. மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் வாயிலாக நிலம் மற்றும் நீர் பயன்பாடு குறித்த திட்டங்களின் தயாரிப்பு மற்றும் செயல்பாடுகள், சுற்றுச்சூழல் காரணிகளான நிலம், காற்றுமாசடைதல், புவி வெப்பமயமாதல் ஆகியவற்றின் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல்;

vi. கட்டணமில்லா பேருந்து பயணம், மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி போன்ற மாநில அரசின் முதன்மை திட்டங்களை மாநில திட்டக் குழு மூலமாக மதிப்பீடு செய்தல்;

vii. மாநில திட்டக் குழு வாயிலாக, மாநில அளவில் முன்னேற விழையும் மாவட்டங்களுக்கான திட்டத்தை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்;

viii. "நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை" 2030-ல் அடையும் மாநில அரசின் முயற்சிகளுக்கு அனைத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை கண்காணித்தல்;

ix. நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டுடன் தொடர்புடைய பெரிய திட்டங்களை அளவிடுதல், இணைத்தல் மற்றும் கண்காணித்து மதிப்பீடு செய்தல்;

x. 11 மாவட்டங்களை உள்ளடக்கிய மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல்;

xi. அரசுத் துறைகளில் ஆதாரங்கள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்துதல்;

xii. மாவட்ட திட்டக் குழுவின் ஒரு அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களை உருவாக்கி மேற்பார்வையிடுதல்;

xiii. மாநில திட்டக் குழு, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல்படுவதற்கான நிர்வாக வசதிகள் செய்தல்;

xiv. பொது மற்றும் தனியார் துறைகள் மூலம் பெறப்படும் மாநில வருவாயினை மதிப்பீடு செய்தல், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், வயது முதிர்ந்தோரின் வாழ்வாதாரம்

குறித்த ஆய்வு, மாநில பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து புள்ளி விவரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரவச் செய்தல் போன்ற பணிகளை பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மூலமாக மேற்கொள்ளுதல்;

xv. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் புள்ளி விவர பகுப்பாய்வு மையம் மூலம் தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வு, தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை குறித்த ஆய்வு மற்றும் தேர்தலுக்கான அறிவுத்திறன், அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்தான ஆய்வு போன்ற ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;

xvi. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை மூலமாக ஒன்றிய / மாநில அரசுகள் மற்றும் வெளி நிறுவனங்களால் நிதியுதவி செய்யப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

xvii. மாநிலத்தின் பல்வேறு முக்கிய பிரச்சனைகள் தொடர்பாக, மாநில அரசின் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து கோரிக்கை மனு தயாரித்து ஒன்றிய அரசுக்கும் தொடர்புடைய அமைச்சகங்களுக்கும் வழங்குதல்;

xviii. இருபது அம்சத் திட்டத்தின் கீழ் பல்வேறு துறை மற்றும் நிறுவனங்களில் செயல்படுத்தப்படும் கண்காணிக்கப்பட வேண்டிய திட்டங்களை சேகரித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்;

xix. ரூ.100 கோடிக்கு மேலான பெரிய உள் கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றத்தை சீராய்வு செய்தல்;

xx. சிறப்பு மற்றும் புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்;

xxi. சிறப்பு முயற்சிகள் பிரிவின் கீழ் மெட்ரோ இரயில் திட்டத்தினை செயல்படுத்துதல்.

## 2.0 துறையின் செயல்பாடுகள்

### 2.1 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகளானது, முன்மாதிரியற்ற மற்றும் அதி முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு மாநிலங்களின் நடப்பு நிலையைக் கருத்திற்கொண்டும், அவற்றின் செயல்திறன், வளர்ச்சி நிலை, உள்ளூர் கொள்கைகள் மற்றும் அவற்றின் முன்னுரிமைகளை கருத்திற்கொண்டும், அனைத்து நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரு திட்டமாகும். இவை வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் என்ற வேறுபாடின்றி

உலகளாவிய இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை உள்ளடக்கியதாகும்.

இந்த நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைந்ததாகவும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாததுமாகவும் மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான மூன்று பரிமாணங்களான, சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவைகளை சமநிலைப்படுத்துவதாகவும் உள்ளன. ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர், திரு. அந்தோனியா கட்டரஸ், 2023ஆம் ஆண்டினை "கணக்கெடுப்பிற்கான ஆண்டாக" அறிவிக்கும் போது, சமூக, பொருளாதார மற்றும் வளர்ச்சிக்கான உரிமைக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது என சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், அவர் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் கொள்கை முடிவெடுக்கும்போது குறுகிய கால கண்ணோட்டத்திலிருந்து நீண்ட கால கண்ணோட்டத்திற்கு மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும் என வலியுறுத்தியதோடு, பன்முகத்தன்மைக்கு மதிப்பளிக்கும் தன்மையோடும் பண்பாட்டு உரிமைகளின் பொதுத்தன்மையை பேணிடும் வகையிலும், ஆழமான மற்றும் முறையான வழிகளில் முடிவெடுக்கும் தன்மையுடன் இயங்குவதற்காக, வளர்ச்சிக்கான செயல் உத்திகளுடன் கூடிய தொலைநோக்கு தன்மையை வளர்த்தெடுக்க வேண்டும் எனவும்

வலியுறுத்தினார். இதன் மூலம் முழு பாலினச் சமத்துவம், அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்திற்காக, சமூக மற்றும் அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படும் மற்றும் எதிர்கால சந்ததியினரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும். மாண்புமிகு முதலமைச்சரின் சமூக நீதி மற்றும் சமத்துவத்தின் தொலைநோக்கு பார்வையால் வழிநடத்தப்படும் தமிழ்நாடு அரசு, "எல்லோருக்கும் எல்லாமும்" வழங்க உறுதி பூண்டு தனித்துவமான மற்றும் அரசின் திராவிட மாதிரியின் அடிப்படையின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதை நோக்கி செயலாற்றி வருகிறது.

### 2.1.1. நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஐந்து முக்கிய கொள்கைகள்

இம்மாநிலமானது, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முதல் ஆறு இலக்குகளான, வறுமையில்லா வாழ்வு, பட்டினியில்லா நிலை, ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு, தரமான கல்வி, பாலினச் சமத்துவம் மற்றும் தூய குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகிவற்றை உள்ளடக்கிய, மக்களை மையப்படுத்திய அணுகுமுறையுடன் கூடிய நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஐந்து கொள்கைகளையும் நிறைவேற்றிடும் உறுதிப்பாட்டுடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முன்னேற விழைதலுக்கான வழிமுறைகளை அறிந்துள்ளதால் மாநிலத்தின் செழுமைக்கு தொடர்புடைய

இலக்குகளான, தூய மற்றும் எளிய வகையில் பெறத்தக்க எரிசக்தி, கண்ணியமான வேலை (ம) பொருளாதார வளர்ச்சி, தொழில், கட்டமைப்பு மற்றும் புதுமை முயற்சிகள், ஏற்றத்தாழ்வை குறைத்தல் மற்றும் நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகிய இலக்குகளில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநிலமானது உயரிய பல்லுயிர் தன்மையுடன், பருவ நிலை மாற்றம், நில வளம் மற்றும் நீர் வளம் ஆகியவற்றை பாதுகாக்கும் கண்ணோட்டத்துடன் புவிக் கோளை பாதுகாப்பதற்கான தனது தொடர் முயற்சிகளில் உறுதிப்பாட்டுடன் உள்ளது, மற்றும் இம்மாநில அரசு, தொழில், கல்வி மற்றும் குடிமை சமூக அமைப்புகளுடன் கூட்டாண்மை முறையில் நல்ல நிருவாகம் மற்றும் திறன்மிகு நிறுவனங்களுடன் அமைதிக்கு உறுதியளிக்கும் ஒரு நிலையான வளர்ச்சிக்கான பாதையை அடைய செயல்பட்டு வருகிறது.

நித்தி ஆயோக்கால் வெளியிடப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய தரவரிசை குறியீடு அடிப்படை அறிக்கையில் தமிழ்நாடு 66 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தில் இருந்தது. 2019ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அதனுடைய இரண்டாம் அறிக்கையில் ஒரு புள்ளி கூடுதலாக பெற்று 67 புள்ளிகளுடன் அதே மூன்றாம் இடத்தை தக்க வைத்திருந்தது. 2020-21-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட

அதன் மூன்றாவது விரிவான அறிக்கையில் தமிழ்நாடு 74 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய தரவரிசை குறியீட்டின் அடுத்த வெளியீடு எதிர்நோக்கப்படுகிறது.

**2.1.2 திறன் வளர்ப்பு**

2030-க்குள் உலகை மாற்றுவோம் என்ற பொருளுரையின் நோக்கமான மனதில் மாற்றம் இருந்தால் அனைத்தும் சாத்தியம் என்பதை செயல்படுத்தும் நோக்கில் இத்துறையானது அதுகுறித்து உணர வைக்கவும் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. சென்னையில் உள்ள அண்ணா நிருவாக பணியாளர்கள் பயிற்சி கல்லூரியில் ஐதராபாத்தைச் சார்ந்த இந்திய நிருவாகப் பணியாளர்கள் கல்லூரி நீடித்த வளர்ச்சி இலக்கு அலகுகளுடன் தொடர்புடைய துறைகளின் முகமை அலுவலர்களுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் நல் ஆளுமை ஆகியவை குறித்து நான்கு நாட்கள் பயிற்சியானது, இரண்டு நாட்கள் காணொலிக் காட்சி வாயிலாகவும், இரண்டு நாட்கள் நேரடி பயிற்சியாகவும் நடத்தப்பட்டது.

மேலும், இத்துறையால் மாநிலத்திற்கென தயாரிக்கப்பட்டுள்ள மாவட்ட நல் ஆளுமை குறியீடு வாயிலாக, மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கும்

மாவட்ட நல் ஆளுமை குறியீடு வரையறையின் கீழ் தரவுகளை எளிதாக சேகரிப்பதன் பயன் குறித்தும், அதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவது குறித்தும் புத்தாக்கப் பயிற்சியானது அளிக்கப்பட்டுள்ளது. இந்த குறியீட்டு அடிப்படையிலான தரவரிசையின் முடிவுகள் விரைவில் வெளியிடப்பட உள்ளது.

கேரள மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் உள்ளூர் அளவில் செயற்படுத்தப்படுவது குறித்து களப்பார்வையுடன் கூடிய 2 நாட்கள் பயிற்சியானது கேரளா இன்ஸ்டிடியுட் ஆஃப் லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷன்-இல் நடத்தப்பட்டது. உள்ளூர்மயமாக்கல் முயற்சியை வலுப்படுத்தும் நோக்கத்துடன் நடைபெற்ற இப்பயிற்சியில் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த ஏறக்குறைய 100 அலுவலர்கள் வரை பயிற்சி பெற்றுள்ளனர்.

நித்தி ஆயோக் அமைப்பின் ஒரு அலுவலகமான Development Monitoring and Evaluation Office (DMEO)உடன் இணைந்து, திட்டங்களின் வெளிப்பாடு மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்த வரையறை குறித்த 2 நாட்கள் பயிற்சியில் புள்ளியியல் பயிற்சி நிறுவனத்தால் அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் நடத்தப்பட்ட பயிற்சியில் மாநில அளவில் அலுவலர்கள் பங்கேற்றனர். இது பல்வேறு துறைகளின் திட்டங்களுக்கு, விளைவுகளின்

அடிப்படையில் மதிப்பீடு செய்வதற்கான கட்டமைப்பை உருவாக்குவதற்கு மாநிலத்தின் திறனை வலுப்படுத்தும்.

### 2.1.3 தொகுப்பு மாவட்ட கூட்டங்கள்

தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் என்பது நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஊரக அளவில் உள்ளூர்மயமாக்கும் பொருட்டு மாவட்ட அளவில் உள்ள அலுவலர்கள் மாவட்ட மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட நிலைகளில் ஒருங்கிணைந்து வடிவமைத்தல் மற்றும் திட்டமிடலின் அவசியத்தை உணர்த்துவதையும், அவற்றினை அறிந்துகொள்ள செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இதன் தொடர்பாக 100 நாட்களில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய 8 தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் முதல்நிலை அலுவலர்களுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்கலுக்கான முக்கியமான குறிகாட்டிகள் மற்றும் திட்டங்கள் குறித்து நடத்தப்பட்டன. இத்தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் கன்னியாகுமரி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விருதுநகர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டன. பல்வேறு நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய குறிகாட்டிகள், திட்டங்கள் மற்றும் ஊரக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய கருப்பொருட்கள் ஆகியவை தொடர்பாக

விவாதிக்கப்பெற்ற இக்கூட்டங்களில் சுமார் 1000 அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

### 2.1.4 திறன்களை மேம்படுத்த ஒருங்கிணைப்பு

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையானது, நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஊரக அளவில் உள்ளூர்மயமாக்கலுக்கு ஊரக நிலையை நோக்கி என்ற உத்தி அணுகுமுறையினை பின்பற்றி பல்வேறு நிலைகளில் – வட்டார அலுவலர்களுக்கும், பின்னர் வட்டார அலுவலர்கள் ஊரக அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கும் வகையில் மாவட்ட அலுவலர்களை கொண்ட ஒரு முக்கிய பயிற்சி குழுவினை உருவாக்கி மேற்கொண்டது.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையானது, நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்குவதற்கான முயற்சியினை கீழிருந்து மேல் அணுகுமுறையில் ஊரக அளவில் சுமார் ஒரு இலட்சம் ஊரக செயற்பாட்டாளர்களுக்கும், 200 பயிற்சியாளர்களுக்கும் பயிற்சியளித்து, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஒன்பது கருப்பொருள்கள் சார்ந்த வல்லுநர்களாக செய்து, அவற்றை வட்டாரம் மற்றும் ஊரக அளவில் முன்னெடுத்து செல்கிறது. தவிர, நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகளுக்கும் மகளிர் மற்றும் குழந்தைநேய பஞ்சாயத்துகளை உருவாக்குவதற்கான சிறப்பு திறன் வளர்ப்பு

பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பால சபாக்கள் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகள் நேய பஞ்சாயத்துகளுக்கான சிறப்பு பயிற்சிகள் உள்ளூர் அளவில் மகளிர் நலன் மற்றும் குழந்தைகள் தொடர்பான நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய உதவும். 50க்கும் மேற்பட்ட பஞ்சாயத்து தலைவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைகளின் துறை அலுவலர்களுக்கும் மற்றும் திட்டம் (ம) வளர்ச்சித் துறையின் கீழ் உள்ள துறைத்தலைமையின் அலுவலர்களுக்கும் Kerala Institute of Local Administration பயிற்சி நிலையத்தின் மூலமாக பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிக்கான நோக்கமே நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குதலுக்கான ஒருங்கிணைப்பு பணிகளை கட்டமைப்பதாகும். நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குதலுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டும் மற்றும் உள்ளூர்மயமாக்குதலுக்கு ஒரு வழிகாட்டும் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

### 2.1.5 மாவட்ட நல் ஆளுமை குறியீடு

மத்திய அரசின் பணியாளர் சீர்திருத்தம் மற்றும் பொது குறைதீர் துறையால் தயாரிக்கப்பட்ட நல் ஆளுமை குறியீடு

2021-ஐ பின்பற்றி மாவட்ட நல் ஆளுமை குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் மாநிலத்தின் தரவரிசையின் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்காக, தேவைப்படும் பகுதிகளில் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அடிப்படையில், இம்மாநிலத்தின் மாவட்ட நல் ஆளுமை குறியீடானது 0.2 நிறையுடன் கூடிய 25 விளைவுகளை உண்டாக்கக்கூடிய குறிகாட்டிகள் மற்றும் 0.1 நிறையுடன் கூடிய துணை குறிகாட்டிகள் என 75 குறிகாட்டிகளை கண்டறிந்து வகைப்படுத்தியுள்ளது. இதற்கான ஒரு அடிப்படை அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளது. இம்முறையின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் மாவட்டங்கள் செயல்திறனின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்படும்.

### 2.1.6 மாநில சீர்திருத்த செயல் திட்டம்

பற்பரிமாண வறுமை குறியீட்டில் உள்ள குறிகாட்டிகள் குறித்த மாநில சீர்திருத்த செயல் திட்டமானது தொடர்புடைய துறைகளுடனான ஆலோசனைகளுக்குப் பிறகு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கொள்கை வகுப்பாளர்களுக்கும் திட்டமிடுபவர்களுக்கும் மற்றும் ஆராய்ச்சி வல்லுநர்களுக்கும் வரும் ஆண்டுகளில் மாநிலத்தின் வறுமை குறித்த நுண்ணறிவை வழங்குவதற்கும்

ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தினை கட்டமைப்பதற்கும் வழிவகுக்கிறது. இந்த மாநில சீர்திருத்த செயல் திட்டமானது நித்தி ஆயோக்குடன் பகிரப்பட்டுள்ளது.

### 2.1.7 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான கொள்கை வடிவமைக்கும் திட்டம்

தமிழ்நாடு, செயல்பாடுகளில் உள்ள சிக்கல்களை முற்றாக களைவதற்காக தொடர்ந்து, பல்வேறு கொள்கைகளை உருவாக்கி வருகிறது. பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்கள் ஆகியோரின் நலனுக்கான கொள்கைகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை உருவாக்கியுள்ளது. அதேபோல், மாநிலத்திற்கான பருவ நிலை மாற்றத்திற்கான இயக்கம், தமிழ்நாடு பருவநிலை மாற்றங்களை திறம்பட எதிர்கொள்ளும் மாநிலமாகவும் 2070ஆம் ஆண்டிற்கு வெகு முன்பாகவே கார்பன் உமிழ்வை பெருமளவில் மட்டுப்படுத்திடுவதற்கான செயல் திட்டத்துடன் குறிக்கோளுடனும் செயல்புரிந்து வருகிறது. இந்த இயக்கம் பருவநிலை மாற்றத்தினை கையாள்வதற்கான திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து, மாவட்ட அளவில் உரிய அலுவலர்களை கொண்ட மாவட்ட மையங்களை மாநிலத்தில் ஏற்படுத்தி வருகிறது.

தொழில் துறை முன்னேற்றத்தினை கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள, ஃபின்டெக் கொள்கை, காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை, வானவியல் மற்றும் பாதுகாப்புத் துறை போன்றவற்றிற்கான தொழில் கொள்கைகள் மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்துடன், தொழில் வளர்ச்சி முன்னேற்றத்தையும், மாநிலத்தின் பொருளாதாரம் டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கினை எட்டுவதன் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளன.,

இதேபோல், பள்ளிக் கல்வித் துறையால், நீடித்த வளர்ச்சி இலக்கின் ஒரு முக்கிய குறிக்கோளான, கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் வேலையில் இல்லாதவர்களின் எண்ணிக்கையை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் மற்றும் நான் முதல்வன் உள்ளிட்ட புதுமைத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அதேபோன்று, உயர்கல்வி பெறுவதில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரித்திடும் முகமாக, புதுமைப் பெண் எனும் திட்டம் அவர்களின் உயர் கல்வியினை உறுதி செய்திடும் வகையில் அமைந்துள்ளதும், மகளிருக்கான இலவச பேருந்து பயணச் சலுகை திட்டம் ஆகியன, பெண்கள் முன்னேற்றத்தினையும் பெண் பணியாளர்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 2.1.8 நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் வெளியீடுகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான செயல்பாடுகளை தெரிவிப்பதற்கும் மற்றும் பரப்புவதற்கும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் பற்றிய புத்தகங்கள் திட்டம் மற்றும் வளர்ச்சி துறையால் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் புத்தகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2023 அன்று வெளியிடப்பட்டன. புத்தகங்கள் தவிர, **நீடித்த வளர்ச்சி இலக்கு மேசை நாட்காட்டி** ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நாட்காட்டியானது, ஒவ்வொரு மாதமும் ஒரு நீடித்த வளர்ச்சி இலக்கில் கவனம் செலுத்தும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச முக்கிய தினங்கள் குறிப்பிடப்பட்டு அந்நாட்களுக்கான இலக்கின் முக்கியத்துவத்தை பரப்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்தந்த இலக்கிற்கு தொடர்புடைய துறைகளும் மற்றும் மாவட்டங்களும் அந்தந்த மாதங்களுக்குரிய கருப்பொருள் சார்ந்து செயல்படும் போது, அனைவரிடத்திலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதோடு, அந்தந்த இலக்கிற்கான குறிகாட்டிகளின் செயல்பாடுகளில் முன்னேற்றமும் காண இயலும். இந்த புத்தகங்கள் பின்வருமாறு:

- “**தொகுப்பு மாவட்ட கூட்டங்கள் - நீடித்த வளர்ச்சி இலக்கினை உள்ளூர் மயமாக்கல்**” எனும் புத்தகத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளைப் பற்றி அறிந்துகொள்வதற்காக மாவட்ட மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட அளவில் மாநிலம் முழுவதும் திறன்களை உருவாக்குவதற்கான முயற்சிகள் குறித்த தகவல்கள் இடம் பெற்றுள்ளன.
- “**நீடித்த வளர்ச்சி இலக்கு தரவு தாள்**” எனும் புத்தகத்தின் வாயிலாக, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் வரும் பல்வேறு குறிகாட்டிகளில் மாநிலத்தின் முன்னேற்றத்தை அறிய இயலும். மேலும், குறிகாட்டிகளுடன் தொடர்புடைய துறைகள் அவற்றின் தொடர் நடவடிக்கைக்காக, மாநில குறிகாட்டி வரையறையில் உள்ள அனைத்து குறிகாட்டிகளும் அளிக்கப்பட்டுள்ளது மற்றும் அந்தந்த குறிகாட்டிகளில் துறைகளின் செயல்பாட்டினை அறிந்துக் கொள்ள இயலுகிறது.
- “**நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள முதலீடுகள்- 100 முயற்சிகள்**” எனும் புத்தகம் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஐந்து முக்கிய கொள்கைகளான, மக்கள், செழிப்பு, புவி, அமைதி மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றை உள்ளடக்கிய

கண்ணோட்டத்தில், பல்வேறு துறைகளில் 100 சிறப்பு முயற்சிகளைப் பற்றி தெரிவிக்கிறது.

- "**நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான கருப்பொருள் சார்ந்த அணுகுமுறை**" எனும் புத்தகம், பஞ்சாயத்து அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான அணுகுமுறையை விவரிக்கிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின் பஞ்சாயத்து அளவிலான ஒன்பது கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டது – வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உயர்த்துதல், நல்வாழ்வு, குழந்தைநேயம், மகளிர் நேயம், குடிநீர் வழங்கலில் தன்னிறைவு, தூய்மை மற்றும் பசுமையான, தன்னிறைவு பெற்ற, சமூகநீதி மற்றும் சமூக பாதுகாப்பு, மற்றும் நல் ஆளுமை, பேணக்கூடிய கிராமமாக இருத்தல் ஆகியனவாகும்.
- **நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயல்பாட்டிற்கான சமூக ஊடகங்களை உருவாக்குதல்**

சமூக ஊடகங்களின் தாக்கம், பல்வேறு தகவல் தொடர்புகளுக்கு வழிவகுத்துள்ளது. இதன் வாயிலாக, உரையாடல்கள் விரைவாகவும் தகவல்கள் எளிதில் சேர்ப்பிக்கப்படுகிறது என்பதால், நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான தகவல்களை பரப்புவதற்கும்

பயன்படுத்தப்படுகிறது. நீடித்த வளர்ச்சி இலக்கு இலச்சினை உருவாக்கப்பட்டு மற்றும் #tnsdggoalkeepers எனும் சமூக ஊடகங்களின் கணக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. மேலும்,

| | |
|---|---|
| இன்ஸ்ட்ராகிராம் கணக்கு | https://instagram.com/tamilnadusdg?igshid=MWI4MTIyMDE= |
| லிங்க்டுன் | https://www.linkedin.com/company/tamilnadusdg/ |
| முகநூல் கணக்கு | https://www.facebook.com/profile.php?id=100089661429180&sk=about |
| மற்றும் டிவிட்டர் கணக்கு | https://twitter.com/tamilnadusdg?s=11&t=mkPi9vbm4sE4x1_Sy_i9Yg |

வாயிலாக நிறுவப்பட்டுள்ளது.

- **எழுத்துப் பட்டறை**

நடத்தை மாற்ற தகவல் தொடர்பு செய்திகளை பரப்புவதற்கும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான முக்கியமான செயல் நடவடிக்கைகளுக்கும் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் அச்சு மற்றும் உள்ளூர் ஊடகங்கள் மூலம்

பரப்புவதற்கான கருத்துகளை உருவாக்க ஒரு எழுத்துப் பட்டறை நடத்தப்பட்டது.

### 2.1.9 நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்பு மையம் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் கூட்டாண்மை

திட்டம் (ம) வளர்ச்சித் துறையின் கீழ் விரைவில் தனது செயல்பாட்டினை துவங்கவுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஒருங்கிணைப்பு மையமானது, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் பல்வேறு குறிகாட்டிகளில் துறைகளின் செயல்பாட்டினை துரிதப்படுத்தி அவற்றில் முன்னேற்றம் காண முற்படுவதோடு, 2030ஆம் ஆண்டிற்கு முன்பாகவே நீடித்த வளர்ச்சி இலக்குகளை மாநிலம் எய்திட உறுதுணை புரியும். இந்த நீடித்த வளர்ச்சி இலக்கு ஒருங்கிணைப்பு மையத்தினை செயல்படுத்தும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டமானது (UNDP) உதவிபுரியும். மேலும், மற்ற ஐ.நா. முகமைகளான யுனிசெஃப் மற்றும் ஐ.நா. மகளிர் அமைப்பிலிருந்து, பெறப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்களுடன் இதற்காக இணைந்து செயல்படும்.

### 2.2 ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பது

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறையின் 02.09.2014-ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.81-இல் ஆணைகள் வெளியிடப்பட்டு ஆதாரங்கள்

அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிகப் பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக தமிழ்நாடு அரசானது, தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல்– வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக (Abdul Latif Jameel - Poverty Action Lab) (J-PAL-SA) அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள, மசாசூசெட்ஸ் தொழில் நுட்ப நிறுவனத்தில் (Massachusets Institute of Technology, USA) செயல்படும் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையிலும் வறுமையைக் குறைக்கின்ற பல்வேறு கொள்கை முயற்சிகளை உருவாக்கவும், மதிப்பீடு செய்யவும் முனைப்பான ஆராய்ச்சியை செய்து வருகின்ற உலகம் முழுவதும் உள்ள வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் உள்ள சில சிறந்த பொருளாதார மேம்பாட்டு வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஒரு கட்டமைப்பாகும். தெற்கு ஆசிய மண்டலத்தில் உள்ள ஜெ-பாலின் பணிகளை இந்தியாவின் நிதி மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்ட ஜெ - பால் தெற்கு ஆசியா வழி நடத்துகிறது,

தமிழ்நாடு அரசிற்கு திட்டங்களின் மதிப்பீட்டாய்வுகளை திறமையாகச் செய்வதற்கு அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு, நான்கு முக்கிய நடவடிக்கைகளின் வாயிலாக உதவி செய்து வருகிறது.

(i) நடப்பு ஆய்வுகளிலிருந்து உள்ளூர் சவால்களுக்கான நுண்ணறிவை செயல்படுத்த கொள்கை ஆய்வு உரையாடல்களை ஈடுபடுத்துவது (ii) சாத்தியமான அளவீட்டிற்கு ஏற்றபடி புத்தாக்கங்களை சோதித்து வடிவமைப்பது (iii) ஆதாரங்களை உருவாக்கவும் நுகரவும் அரசுத் திறனை வலுப்படுத்துவது (iv) முடிவு எடுத்தலில் நிர்வாகத் தரவுகளின் பயன்பாட்டை மேம்படுத்துவது.

இப்பணி 13 அரசுத் துறைகள் மற்றும் ஜே-பாலை சேர்ந்த 20-க்கும் மேலான ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட, 60 ஆராய்ச்சியாளர்களை கொண்டது. தலைமைச் செயலாளரின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டும் குழுவால், 2014-ஆம் ஆண்டிலிருந்து நடந்த 7 வழிகாட்டும் குழுக் கூட்டங்களில், 25 ஆய்வுகளும் மற்றும் அளவீட்டிற்கான ஒரு முன்னோடி ஆய்வும் ஒப்புதல் அளிக்கப்பட்டு அவற்றில் 13 முன்னோடி மற்றும் வாய்ப்பு அறியும் ஆய்வுகளும், மூன்று முழு அளவிலான தாக்க விளைவுகளின் மதிப்பீட்டாய்வுகளும் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத்

திட்டம் (ICDS) மூலமாக தொற்றா நோய்களின் தாக்கத்தை குறைப்பதற்கான தலைப்புகள் முதல் சிறார் நலன் பாதுகாப்பு மற்றும் கல்வியும் மேலும் முன் ஆரம்பப் பள்ளியில் கணித விளையாட்டு அடிப்படையிலான ஒரு புத்தாக்க ஆய்வும் முடிக்கப்பட்டுள்ளது.

தற்போது, இக்கூட்டாண்மையின்கீழ் முதியோர்களின் நல்வாழ்வு குறித்த குழு ஆய்வு, சொத்து வரி வசூலை மேம்படுத்துதல் மற்றும் மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் தாக்கம் பற்றிய இரண்டு சீரற்ற மதிப்பீடுகள், குழந்தை பருவ பெற்றோரின் ஈடுபாட்டை மேம்படுத்துதல், உயர்நிலைப் பள்ளி மாணவர்களைத் தக்கவைத்தல், இரத்த சோகையைக் குறைத்தல் மற்றும் ஊட்டச்சத்தை மேம்படுத்துதல், மருத்துவ பரிசோதனைக்காக இயந்திர கற்றலைப் பயன்படுத்துதல் மற்றும் நிர்வாகத் தரவுகளைப் பயன்படுத்துதல், தொலைநிலைத் திட்டத்தைச் சுற்றி ஆறு வாய்ப்பறியும் ஆய்வுகள், முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பு (Education Management Information Systems(EMIS)) ஆகியவற்றிலிருந்து முடிவெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலத்தின் முக்கிய முன்னுரிமைகளுக்காக 13 துறைகளுடன் இணைந்து ஆதரவுப் பகிர்வு, புதிய தலையீடுகளை சோதனை செய்தல் மற்றும் இணை வடிவமைத்தல் ஆகிய பணிகளை ஜெ - பால் நடத்துகிறது. மேலும், கூட்டுக் கொள்கை உரையாடல்கள் மற்றும் மதிப்பீடுகளுடன் சேர்ந்து ஜே-பால், மூத்த குடி மக்கள் மற்றும் மாநில கொள்கை வரைவு ஆகியவற்றை முறையே சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறைகளுடன் இணைந்து செயல்படுத்துகிறது. ஜே-பால், தமிழ் நாடு மின் ஆளுமை நிறுவன ஒத்துழைப்புடன் முடிவெடுத்தலுக்கான நிர்வாகத் தரவுகளின் சாத்தியக் கூறுகளை வெளிப்படுத்துகிறது. மேலும், உட்கட்டமைப்பை ஆதரிப்பதன் மூலம் உள்மதிப்பீடுகளிலிருந்து ஆதாரங்களை பயன்படுத்தவும், உருவாக்கம், பகுப்பாய்வு செய்யவும் பதினைந்து தனிப்பயனாக்கப்பட்ட பட்டறைகள் வாயிலாக பணியாளர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இப்பயிற்சி, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, சமூக நலத்துறை பணியாளர்களுக்கும் மற்றும் இந்திய குடிமையியல் பயிற்சியாளர்களுக்கும் கூடுதலான ஆலோசனையும் ஆதரவும் அளிக்கிறது. கருத்துகளுக்கு மாற்றாக மேம்பட்ட தரவு இயக்க முடிவு எடுத்தல் வழிகளுக்கான கருத்துக்களை

பரிமாற்றம் செய்ய ஜே-பால், புள்ளி விவரப் பகுப்பாய்வு மையத்துடன் (J-PAL – DAU) இணைந்து தற்போது கொள்கை வலை கூட்டத் தொடர்களுக்கான தரவுகளை நடத்துகிறது.

முடிவுகளும் பரிந்துரைகளும் வழிகாட்டும் குழு மற்றும் ஆலோசனைக் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவற்றின் கண்டுபிடிப்பின் அடிப்படையிலான புத்தாக்கங்களும் மேம்பாடுகளும் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இக்கொள்கை ஆராய்ச்சி ஆய்வில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, பள்ளிக்கல்வி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனங்கள், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகம் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகிய துறைகள் ஈடுபட்டுள்ளன.

### 2.2.1 முக்கிய சாதனைகள்

ஜெ-பாலுடனான தமிழ்நாட்டின் முறையான கொள்கை ஆராய்ச்சிக் கூட்டாண்மை, முக்கிய கொள்கைக் கேள்விகளைத் தெரிவிக்கவும், மதிப்பீடுகளின் பயன்பாட்டை ஒருங்கிணைக்கவும் பல துறைகளுக்கு முறையான கட்டமைப்பை வழங்கியுள்ளது. முடிவெடுப்பதைத் தெரிவிக்க, தரவு மற்றும் ஆதாரங்களுக்கான தீவிர கோரிக்கையுடன் அரசாங்கம், தற்போது ஒரு வலுவான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக, சுகாதார மற்றும் குடும்பநலம், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை மற்றும் பள்ளிக் கல்வித் துறைகளில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அடிப்படை சிக்கல்களை நன்கு புரிந்து கொள்வதற்கும் மேம்பாடுகளைச் செய்வதற்கும் ஆராய்ச்சி நுண்ணறிவுகளைப் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, பள்ளிகளில் எல்கேஜி/யுகேஜி முன்னோடி திட்டத்தை மதிப்பிடுவதன் ஒரு பகுதியாக சேகரிக்கப்பட்ட தரவுகள், கோவிட் காலங்களில் பள்ளிகள் மூடப்பட்டதால் ஏற்படும் கற்றல் இழப்பு மற்றும் பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்ட பிறகு கற்றல் மீட்பு மற்றும் அதற்கு அரசின் முதன்மையான 'இல்லம் தேடிக் கல்வி' திட்டத்தின் நேரிடையான பங்களிப்பு பற்றிய முக்கியமான நுண்ணறிவுகளை வழங்கியது.

முதியோர் குழு கணக்கெடுப்பின் அடிப்படை மற்றும் முதல் அலையின் ஒரு பகுதியாக சேகரிக்கப்பட்ட தரவு, குறிப்பாக தனியாக வாழும் முதியோர்கள் எதிர்கொள்ளும் சவால்களின் போக்குகளைக் காட்டுவதோடு மட்டுமல்லாமல், முதியோர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான சாத்தியமான கொள்கை நடவடிக்கைகளை அரசிற்குத் தெரிவிக்கிறது.

அரசுக் கொள்கை வகுப்பில் மதிப்பீடுகள் மற்றும் தரவின் பயன்பாட்டை வலுப்படுத்தவும், நிறுவனமயமாக்கவும் நிரல் மதிப்பீடுகளுக்கான வழிகாட்டுதல்களை வெளியிடுவதன் மூலம், கொள்கை வகுப்பில் மதிப்பீடுகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மேம்பட்ட பகுப்பாய்வு மற்றும் பயனுள்ள முடிவெடுப்பதற்கு நிர்வாகத் தரவைப் பயன்படுத்துவதை ஆதரிக்க தரவுப் பகுப்பாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மதிப்பீடு மற்றும் செயல் முறை ஆராய்ச்சித் துறை மற்றும் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறைகளால் உருவாக்கப்பட்ட தரவுகளின் பயன்பாட்டை மேம்படுத்த டிஜிட்டல் தரவு சேகரிப்பு தளங்களையும் மற்றும் ஒருங்கிணைந்த புதிய உத்தரவாதமான வழிமுறைகளையும்

மேற்கொள்கிறது. தமிழக அரசின் மிக முன்னுரிமையான கொள்கைத் திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றை விரிவுபடுத்துவதற்கு முன்பு, அவற்றின் மீது கள ஆய்வு மேற்கொண்டும், விவாதக் கூட்டங்கள் நடத்துவதன் மூலமும், இந்தியாவின் பிற பகுதிகளிலோ அல்லது உலகளவிலோ பரிசோதிக்கப்பட்ட புதுமையான கொள்கைகளைக் கண்டறிந்து அவற்றினை தமிழகத்தில் ஆய்வுக்குட்படுத்திட, தமிழக அரசும் தெற்காசியாவிற்கான அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பும் (J-PAL-SA) தொடர்புடைய முக்கிய துறைகளுடன் இணைந்து செயலாற்றி வருகிறது.

**2.3 சிறப்பு முயற்சிகள்**

அரசு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 02.11.2006 ஆம் நாளிட்ட 146 ஆம் (நிலை) எண் அரசாணையில், "பொது அதிகார பொருண்மைகளின்" கீழ் வரும் அலுவல் விதிகளின் முதலாவது அட்டவணையில் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மையை சேர்ப்பதற்கு ஆணைகள் பிறப்பித்தது. வெவ்வேறு துறைகளிடமிருந்து வரப்பெற்ற புத்தாக்கத் திட்டங்களை செயல்முறை படுத்துவதும் அரசின் நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிப்பதும் சிறப்பு முயற்சிகள் பிரிவின் பொருண்மையாகும். நோக்கத்தினை

சிறப்பு முயற்சியாக செயல்படுத்துவதற்கான விரிவான நடைமுறைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் ஒருங்கிணைக்கப்படலாம். அதன் அடிப்படையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18.01.2007 ஆம் நாளிட்ட 10 ஆம் (நிலை) எண் அரசாணையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், இத்துறையின் கீழ், 'சிறப்பு முயற்சியாக' செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**2.4 இருபது அம்சத் திட்டம்-2006**

இருபது அம்சத் திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, 1975ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டது. தற்போது "இருபது அம்சத் திட்டம்-2006" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வறுமையினை குறைத்தல், வேலை வாய்ப்பினை பெருக்குதல், கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்தப் பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும்

நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்களைக் கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம்-2006-இன் கீழ் குறித்த இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் செயல்பாடுகள் குறித்த காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள், திட்டங்களை செயல்படுத்தும் துறைகள்/ நிறுவனங்களிடமிருந்து ஒவ்வொரு காலாண்டும் இத்துறையினால் சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு மத்திய புள்ளிஇயல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

**2.5 முக்கிய பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள்**

தலைமைச் செயலகத்தில் உள்ள துறைகளான எரிசக்திதுறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் பொதுப்பணித் துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களான மதிப்பீடு ரூ. 100 கோடிக்கு மேலானத் திட்டங்களின் (Major Infrastructure Projects) முன்னேற்றம் குறித்து வளைதளத்தில் (Web-portal) "இ-முன்னேற்றம்" தரவுதளத்தில் பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் (MIP's) தரவுகள்,

துறைத் தலைமைகளின் (HoD's) மூலம் உள்ளீடு செய்யப்படுகின்றன. மேலும் தரவுகளின் ஆய்வு கூட்டம் இரண்டு மாத இடைவெளியில் மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்கள் தலைமையில் நடைபெறுகின்றன. பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் தரவுகளை மேலும் சீரமைக்க, இணையதள பகுதிகளிலுள்ள சில அறிக்கைகளை திருத்தம் செய்ய திட்டம் மற்றும் வளர்ச்சி துறையானது தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது. பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் தரவுகளை கண்காணிப்பு மற்றும் தரவுகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய உதவும் முதன்மை துறையாக திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயல்படுகிறது.

### 3.0 துறைத்தலைவர்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகள் / நிறுவனங்கள் பின்வருமாறு:

i. மாநில திட்டக் குழு
ii. பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறை
iii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை
iv. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

v. **சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL), ஒரு கூட்டுத்துறை நிறுவனம்.**

**இத்துறைகளின் நடவடிக்கைகள் கீழ்வருமாறு விளக்கப்பட்டுள்ளன:**

### 3.1 மாநிலத் திட்டக் குழு

மாநில திட்டக் குழு (மாதிகு) மாநிலத்தின் வளர்ச்சி குறித்த செயல்பாடுகளின் மீது பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும் ஆலோசனை அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

தற்போதைய மாநில திட்டக் குழுவானது, ஜீன் 2021 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அலுவல்சாரா தலைவராகவும், துணைத் தலைவர், இரண்டு முழு நேர உறுப்பினர்கள் மற்றும் ஏழு பகுதி நேர உறுப்பினர்களைக் கொண்ட 10 உறுப்பினர்களுடன் மறுசீரமைக்கப்பட்டது. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை ஆகியோர் மாநில திட்டக் குழுவின் அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர் செயலாளர், மாநில திட்டக் குழு அவர்கள் நிர்வாகத்தின் பொறுப்பாளர் ஆவார்.

#### 3.1.1 மாநில திட்டக் குழுவின் முதன்மையான பணிகள்

(i) பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை போன்ற பேரியல் பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளைக் கண்காணித்தல் மற்றும் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும்

திட்டங்களைத் திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசுக்கு ஆலோசனை அளித்தல்;

(ii) தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை கண்காணித்து அதன் வளர்ச்சிக்கான அறிக்கைகளை அரசுக்கு தேவைப்படும் பொழுது அனுப்புதல்;

(iii) நீடித்த வளர்ச்சி இலக்குகள் – 2030-இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கும், ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வழிகாட்ட நீண்ட, நடுத்தர மற்றும் குறுகிய கால இலக்குகளை வகுப்பதில் மாநில அரசுக்கு உதவுதல்;

(iv) ஐக்கிய நாட்டு பொது சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 2030-இல் அடைய வேண்டிய நீடித்த வளர்ச்சி இலக்குகள் நிதிக்குழுவின் குறிக்கோள்களுக்கு ஏற்ப துறைச்சார்ந்த செயல்பாட்டு திட்டங்கள் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல்;

(v) கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுப்பதற்கும் அவற்றை செயல்படுத்துவதை துரிதப்படுத்துவதற்கும், "கொள்கை ஒத்திசைவு சிக்கல்களை" முறையாக நிவர்த்தி செய்து,

துறை மற்றும் துறை சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு தளத்தை வழங்கும்;

(vi) பல்வேறு துறைகளில் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்டு அதன் ஒப்புமைகளை அரசு சார்ந்த தேசிய, பன்னாட்டு வல்லுநர்கள், கல்வி மற்றும் கொள்கை ஆராய்ச்சி வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டமைப்பை ஊக்குவித்தல்;

(vii) தகுந்த உள்ளீடுகள் மற்றும் அளவீடுகளை மாநிலத்திற்கு அளித்து மனிதவள மேம்பாடு குறியீடு, பாலின குறியீடு மற்றும் இதர குறியீடுகள் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளை அணுகுதல் மற்றும் உகந்த திட்டங்களுடன் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

(viii) தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்திய அளவிலும் உலக அளவிலும் செயல்பட்டுவரும் பல முன்னோடியான நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து ஆய்வின் வாயிலாக அத்துறைகளில் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டிய நுட்பமான விவரங்களை அரசுக்கு பரிந்துரைத்தல்;

(ix) தேசிய மற்றும் பன்னாட்டு வல்லுநர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்கள் கூட்டு சமூகத்தின் மூலம் அறிவு, புதுமை மற்றும் தொழில் முனைவோர் ஆதரவு அமைப்பை உருவாக்க உதவுதல்;

(x) துறைகளுக்கு இடையேயான வேறுபாடுகள் மற்றும் ஒதுக்கீடுகள், ஒழுங்கு முறை ஆகியவற்றின் இலக்குகளை அடைவதற்கான கட்டாய கட்டமைப்பு உள்ளடக்கிய கொள்கை ஒத்திசைவு ஆலோசனைகளை வழங்குதல்;

(xi) இதேபோல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பு மற்றும் ஒருவரும் விடுபடாமல் இருத்தல் என்ற கருத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்;

(xii) நல்ல உள்ளாட்சி நிர்வாகத்திற்கான பரவலாக்கப்பட்ட திட்டமிடல் கருத்தின் கீழ் கட்டாயப்படுத்தப்பட்ட அமைப்புகளை செயல்படுத்துவதன் செயல்திறன் குறித்து ஆலோசனை வழங்குதல்;

(xiii) மேற்படி பணிகளுடன் மாநில திட்டக் குழு கீழ்கண்டுள்ள திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது;

அ. மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

ஆ. மாநில புதுமை முயற்சிகள் திட்டம்

இ. தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் திட்டங்கள்

**3.1.2 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி**

அரசாணை (நிலை) எண்.108, தி.வ.(ம).சி.மு துறை, நாள்: 15.09.2022- இன்படி மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டம் மறுசீர்திருத்தம் / மறுவடிவமைப்பு செய்யப்பட்டது. மாவட்டங்களுக்கிடையே கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து போன்ற வளர்ச்சி குறியீடுகளில் பிராந்திய ஏற்றத் தாழ்வுகள் மற்றும் பின்தங்கிய நிலையை குறைப்பதே இத்திட்டத்தின் குறிப்பிட்ட நோக்கமாகும். பிராந்திய ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கான குறியீடுகளை வடிவமைக்க முதல் இரண்டு ஆண்டுகளுக்கு (2022-23 மற்றும் 2023-24) தேர்ந்தெடுக்கப்பட்ட குறியீடுகள்:

1. முதல் 1000 நாட்களில் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல் மற்றும் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்.

2. ஆரம்பப்பள்ளிக் குழந்தைகளின் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதத் திறன்களைப் படிக்கும் மற்றும் எழுதும் திறனை மேம்படுத்துதல்.

மாவட்ட அளவிலான அறிக்கையின்படி தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு-5 மற்றும் கற்றல் முடிவுகள் குறித்த தரவுகளின் அடிப்படையில், முறையே கல்வி, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான திட்டங்களைச் செயல்படுத்த பின்வரும் மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

முதல் திட்டத்தில் பின்வரும் 14 மாவட்டங்களில் உள்ள 23 வட்டாரங்களில் **சுகாதாரம்** மற்றும் **ஊட்டச்சத்து** நடைமுறைப்படுத்தப்படும், அவை,

| வ. எண் | மாவட்டம் | வட்டாரங்கள் |
|---|---|---|
| 1. | பெரம்பலூர் | 1. ஆலத்தூர்<br>2. பெரம்பலூர் |
| 2. | கரூர் | 3. கிருஷ்ணராயபுரம்<br>4. தோகைமலை |
| 3. | திருச்சிராப்பள்ளி | 5. துறையூர்<br>6. மண்ணச்சநல்லூர் |

| | | |
|---|---|---|
| 4, | அரியலூர் | 7. ஆண்டிமடம்<br>8. திருமானூர் |
| 5. | சிவகங்கை | 9. எஸ்.புதூர்<br>10. திருப்பத்தூர் |
| 6. | கள்ளக்குறிச்சி /<br>விழுப்புரம் | 11. கல்வராயன்மலை<br>12. திருவெண்ணைநல்லூர் |
| 7. | புதுக்கோட்டை | 13. அன்னவாசல்<br>14. திருவரங்குளம் |
| 8. | திருவண்ணாமலை | 15. ஜவ்வாதுமலை<br>16. கலசப்பாக்கம் |
| 9. | வேலூர் /<br>இராணிப்பேட்டை | 17. கே.வி.குப்பம்<br>18. திமிரி |
| 10. | திருநெல்வேலி /<br>தென்காசி | 19. அம்பாசமுத்திரம்<br>20. நாங்குநேரி<br>21. சங்கரன் கோயில்<br>22. மேலநீலித்தநல்லூர் |
| 11. | நீலகிரி | 23. கோத்தகிரி |

இரண்டாவது திட்டத்தில் பின்வரும் 6 மாவட்டங்களில் **கல்வி** நடைமுறைப்படுத்தப்படும். அவை,

1. விழுப்புரம், 2. சேலம், 3. கடலூர், 4. நாகப்பட்டினம், 5. அரியலூர் மற்றும் 6. திருவாரூர்

திட்டங்களைச் செயல்படுத்தவும், முன்னோக்கு திட்டங்களின் ஒப்புதல் மற்றும் திட்டங்களின் ஒப்புதல் ஆகியவற்றை வழிகாட்டவும் மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான அதிகாரக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், கோட்டத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளை இணைத்து, மாவட்ட ஆட்சியர்கள் திட்டத்தைக் கண்காணிப்பார்கள்.

### 3.1.2.1 திட்டங்களுக்கு ஒப்புதல்

இத்திட்டத்திற்காக அமைக்கப்பட்ட மாநில அளவிலான அதிகாரக் குழு திட்டங்களுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது. 2022-2023 ஆம் நிதியாண்டில், சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் கல்வி ஆகிய குறியீடுகளில் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க ரூ.39.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மூன்று திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அவை,

| வ. எண் | திட்ட விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | 2757 அங்கன்வாடி மையங்களுக்கு வளர்ச்சி கண்காணிப்பு கருவிகள் வழங்குதல் (ஊட்டச்சத்து) | 2,75,70,000 |

| | | |
|---|---|---|
| 2. | ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளின் தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்களில் படிக்கும் மற்றும் எழுதும் திறனை மேம்படுத்துதல் (கல்வி) | 25,49,81,134 |
| 3. | முதல் 1000 நாட்களில் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல் (சுகாதாரம்) | 11,62,00,000 |

### 3.1.3 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே புத்தாக்கத்தின் இருப்பிடமாக உருவாக்குவதற்கும், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் செப்படம்பர் 2014-ல் ஏற்படுத்தப்பட்ட திட்டம் ஆகும். இத்திட்டம், புதுமைகளை வளர்ப்பதற்கான செயல்முறை மற்றும் நிதி உதவி அளிக்கின்றது. புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு, மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, தொடக்க நிதியாக ரூ.150 கோடி அல்லது அரசு நிர்ணயித்தபடி தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுவருகிறது.

2015-16 ஆம் ஆண்டு முதல் 2020-21 வரை 330 திட்டங்கள் சுமார் ரூ.696.90 கோடி மதிப்பில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டங்களின் கீழ் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்திற்கென 2022-23ஆம் நிதியாண்டில் ரூ.150 கோடி வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 2022-23ஆம் நிதியாண்டின் முதல் சுற்றில் ரூ.107.39 கோடி அளவில் 29 திட்டங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது, மாநிலத் திட்டக் குழுவில் இத்திட்டத்தின் கீழ் ஆண்டு முழுவதும் துறைகளிடம் இருந்தும், மாவட்ட ஆட்சியாளரிமிருந்தும் முன்வரைவுகள் நேரடியாக பெறப்பட்டு ஒப்புதல் வழங்கி புத்தாக்க திட்டங்களை ஊக்குவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து தலைமைச் செயலக துறைகளால் மட்டும் வழங்கப்பட்டு வந்த திட்ட ஒப்புதல், தற்பொழுது மாநிலத் திட்டக் குழுவின் வாயிலாகவே புத்தாக்க திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கும் வகையில் வழிவகை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனைத்து துறைகளும் மாநில மற்றும் ஒன்றிய அரசு திட்டங்களை செயல்படுத்தும் பணிச்சுமை காரணமாக, குறைந்த நிதி ஒதுக்கீட்டில் புத்தாக்க முயற்சி திட்டங்களை செயல்படுத்துவதில் சுனக்கமும்,

தொய்வும் ஏற்படுகிறது. எனவே, புத்தாக்க முயற்சியை செயல்படுத்தும் திட்ட வடிவமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், மாநிலத் திட்டக்குழு அளவில் புத்தாக்க முயற்சிகள் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**3.1.4 தமிழ்நாடு மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம்**

தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் (TNSLURB) 2011 ஆம் ஆண்டு மாநில திட்டக் குழுவிற்குள் நிரந்தர அமைப்பாக அமைக்கப்பட்டது. இது, நில வளங்களை மதிப்பிடுவதற்கும், நிலம் மற்றும் நீர் வளங்களின் கொள்கை தலையீடுகளுக்கு அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் உருவாக்கப்பட்டது.

நிலப்பயன்பாடு, நீர், விவசாயம், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல், சதுப்பு நிலம், காலநிலை மாற்றம், நகரமயமாக்கல், வனம், கழிவு மேலாண்மை மற்றும் சுகாதாரம் ஆகிய தொடர்புடைய துறைகளில் 2011-12 ஆம் ஆண்டு முதல் 2022-23 ஆம் ஆண்டு வரை ரூ.786.94 லட்சம் செலவில் மொத்தம் 73 ஆராய்ச்சி ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

இதேபோல், பல்வேறு தொடர்புடைய கருப்பொருள் தலைப்புகளில் 15 பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகள் புகழ்

பெற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பில் ரூ.83.47 இலட்சம் செலவில் நடத்தப்பட்டுள்ளன.

### 3.1.5 முன்னேற விழையும் மாவட்டங்களின் நிலையை மாற்றியமைக்கும் திட்டம்

முன்னேற விழையும் மாவட்டங்களின் நிலையை மாற்றுதல் என்ற திட்டம் 2017 ஆம் ஆண்டில் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் கூட்டுறவு கூட்டாட்சி, ஒருங்கிணைப்பு (ஒன்றிய மற்றும் மாநில திட்டங்களின் ஒருங்கிணைப்பு), ஒத்துழைப்பு (ஒன்றிய, மாநில அளவிலான அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள்), அனைவருக்குமான வளர்ச்சியை உறுதிசெய்தல், குடிமக்கள் அனைவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், உறுதியான ஈடுபாட்டுடன் கூடிய மக்கள் இயக்கத்தால் உந்தப்படுகின்ற மாவட்டங்களுக்கிடையேயான போட்டி ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

ஒருங்கிணைந்த குறியீட்டின் அடிப்படையில், அடையாளம் காணப்பட்ட 115 முன்னேற விழையும் மாவட்டங்களின் பட்டியலில் தமிழ்நாட்டிலிருந்து இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. வறுமை, சுகாதாரம் (ம) ஊட்டச்சத்து, கல்வி மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் எதிர்கொள்ளும்

சவால்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

### 3.1.5.1 கவனம் செலுத்தும் அம்சங்கள்

சுகாதாரம் (ம) ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை (ம) நீர்வளங்கள், நிதி உள்ளடக்கம், திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய கவனம் செலுத்தும் அம்சங்களாகும்.

### 3.1.5.2 நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் தரவரிசை

மாவட்டங்கள் முதலில் தங்கள் மாநிலத்திற்குள் உள்ள சிறந்த மாவட்டத்திற்கு இணையாக முன்னேறுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றன. பின்னர் மற்றவர்களுடன் போட்டியிடுவதன் மூலமும், மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதன் மூலமும் நாட்டின் சிறந்த மாவட்டங்களில் ஒன்றாக மாற ஊக்குவிக்கப்படுகின்றன.

49 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளில் மாவட்டங்களில் மாதந்தோறும் ஏற்படும் முன்னேற்றத்தைப் பதிவு செய்வதற்காக ஓர் (online) கண்காணிப்பு இணையதளம் நித்தி ஆயோக்கினால் (NITI Aayog) நிறுவப்பட்டுள்ளது.

மாவட்டங்கள் தங்கள் இலக்குகளுக்கு எதிராக அடைந்துள்ள முன்னேற்றத்தின் அடிப்படையில், மாவட்டங்களின் ஒட்டு மொத்த முன்னேற்றமும் துறைசார் செயல்திறனும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன. இத்தரவரிசைப்படுத்துதல் மாவட்டங்களுக்குகிடையே போட்டியை உருவாக்குகின்றது.

தேசிய அளவில் முதலிடம் பெறும் மாவட்டத்திற்கு விருதும், ரூ.10 கோடி தொகையும் மேலும் இரண்டாமிடம் பெறும் மாவட்டத்திற்கு விருதும், ரூ.5 கோடி தொகையும் வழங்கப்படுகின்றன. இத்தொகை அந்த மாவட்டத்திற்கு தேவையான திட்டங்களை செயல்படுத்த பயன்படுகிறது.

### 3.1.5.3 நிதி ஆதரவு

மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் (ம.பொ.நி), அவற்றின் பெருநிறுவன சமூகப்பொறுப்பு (Corporate Social Resposibility) நிதி மூலம் மாவட்டங்களுக்கு ஆதரவளிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

மேலும், முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளின் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு மாவட்டங்களுக்கு வெளிநாட்டு நிதியுதவித் திட்டம் (EAP), ஜப்பான் சர்வதேச

கூட்டுறவு முகமை (JICA) ஆகியவற்றின் மூலம் நித்தி ஆயோக் (NITI Aayog) ஊக்குவிப்பு நிதி வழங்குகிறது.

### 3.1.5.4 மாவட்டங்களின் செயல்பாடு

தொடக்கத்திலிருந்தே படிப்படியாக முன்னேறி வரும் விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள், கடந்த 2018 ஏப்ரலில் முறையே 45.6 மற்றும் 46.8 என்ற அடிப்படை மதிப்பிலிருந்து, 2023 ஜனவரியில் முறையே 64.8 மற்றும் 64.1 என்ற கூட்டு குறியீட்டு புள்ளிகளை எட்டியுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் வேளாண்மை மற்றும் நீர்வள ஆதாரத் துறையில் முறையே ஏப்ரல் - மே 2019 மற்றும் பிப்ரவரி – மார்ச் 2021 இல் அதன் செயல்திறனுக்காக முதல் இடத்தைப் பெற்றது. இதற்காக திட்டம் சாரா நிதியாக தலா ரூ.3 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இராமநாதபுரம் மாவட்டம் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒட்டு மொத்த டெல்டா தரவரிசையில் முன்னணியில் இருந்த காரணத்தால் அம்மாவட்டத்திற்கு ரூ.4 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

2019 பிப்ரவரி - மார்ச் மாதங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு, அத்துடன் 2020 ஜூன்- ஜூலை மாதங்களில் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துத் துறையில்

முதல் இடத்தையும், 2021 அக்டோபரில் ஒட்டுமொத்த செயல்திறனில் இரண்டாவது இடத்தையும் பெற்றதற்காக விருதுநகர் மாவட்டத்திற்கு ரூ.7 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2021 டிசம்பரில் ஒட்டுமொத்த டெல்டா தரவரிசையில் விருதுநகர் மாவட்டம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. அதன் பொருட்டு இம்மாவட்டத்திற்கு ரூ. 4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் விருதுநகர் மாவட்டம் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒட்டுமொத்த டெல்டா தரவரிசையில் முன்னணியில் இருந்த காரணத்தால் அம்மாவட்டத்திற்கு ரூ.4 கோடி பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**3.1.5.5 முன்னேற விழையும் வட்டாரங்கள் திட்டம்**

முன்னேற விழையும் மாவட்டங்கள் அடைந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தற்போது, முன்னேற விழையும் மாவட்டங்கள் திட்டத்தின் மாதிரியானது வட்டார அளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

நித்தி ஆயோக் ஜனவரி 2023 ஆம் ஆண்டு முன்னேற விழையும் வட்டாரங்கள் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் 500 பின்தங்கிய வட்டாரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவ்வட்டாரங்களின் முன்னேற்றமானது சுகாதாரம் (ம) ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை (ம) நீர்வள மேலாண்மை, திறன்மேம்பாடு (ம) நிதி உள்ளடக்கம், அடிப்படை கட்டமைப்புகள் (ம) சுய உதவிக் குழுக்கள் மற்றும் மாநிலத்திற்கென தனிப்பட்ட ஐந்து குறிகாட்டிகளாலும் கண்காணிக்கப்படும்.

இவ்வட்டாரங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புப் பலகை தேசிய தகவல் மையத்தால் (NIC) வடிவமைக்கப்பட்டுள்ளது.

முன்னேற விழையும் மாவட்டங்களிலிருந்து தலா ஒரு வட்டாரம் உட்பட தமிழ்நாட்டிலிருந்து 16 முன்னேற விழையும் வட்டாரங்கள், இத்திட்டத்தைச் செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**முன்னேற விழையும் வட்டாரங்கள் திட்டத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள வட்டாரங்களின் பட்டியல்**

| வ. எண். | மாவட்டம் | வட்டாரம் |
|---|---|---|
| 1 | அரியலூர் | ஆண்டிமடம் |
| 2 | கள்ளக்குறிச்சி | கல்வராயன்மலை |

| | | |
|---|---|---|
| 3 | கரூர் | தோகைமலை |
| 4 | பெரம்பலூர் | ஆலத்தூர் |
| 5 | புதுக்கோட்டை | திருவரங்குளம் |
| 6 | இராமநாதபுரம் | திருவாடனை |
| 7 | இராணிப்பேட்டை | திமிரி |
| 8 | சிவகங்கை | திருப்பத்தூர் |
| 9 | நீலகிரி | கோத்தகிரி |
| 10 | தென்காசி | மேல்நீலிதநல்லூர் |
| 11 | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை |
| 12 | திருச்சிராப்பள்ளி | துறையூர் |
| 13 | திருநெல்வேலி | நாங்குநேரி |
| 14 | வேலூர் | கே.வி.குப்பம் |
| 15 | விழுப்புரம் | திருவெண்ணைநல்லூர் |
| 16 | விருதுநகர் | திருச்சுழி |

### 3.1.6 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளைச் செயல்படுத்துவதில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் வழிகாட்டுதலின்படி, மாநிலத் திட்டக் குழுவானது, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையுடன் இணைந்து, தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்புடன் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

#### 3.1.6.1 உயர்மட்டக் குழு மற்றும் பணிக்குழுக்கள்

மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுவதற்காக முகமை துறைகளின் அரசுச் செயலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான உயர் மட்டக் குழுவானது அரசாணை நிலை எண்.73, திவ(ம)சிமு (நீவஇ) துறை, நாள் 02.06.2022 வாயிலாக மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் அவர்களை இந்த உயர்மட்டக் குழுவின் இணைத் தலைவராகவும் மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் அவர்களை இதன் உறுப்பினராகவும் சேர்த்து மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

குறிக்கோள்களையும், இலக்குகளையும் அடையும் பொருட்டு தொடர் ஆய்வு செய்து கண்காணிப்பதற்காக,

17 இலக்குகளையும் உள்ளடக்கி, எட்டு (8) பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்புடைய துறைகளின் செயலர்கள் இப்பணிக்குழுக்களின் தலைவர்களாக உள்ளனர். இப்பணிக்குழுக்கள் விதிமுறைகளின்படி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை இணைத்தல், குறிகாட்டிகளின் மேம்பாட்டினைக் கண்காணித்தல், ஒவ்வொரு இலக்கிற்கான நீடித்த வளர்ச்சி இலக்கிற்கான தமிழ்நாட்டின் பார்வை ஆவணத்தைத் தயாரித்தல், 17 இலக்குகளை அடைவதை அவ்வப்போது மதிப்பாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் போன்றவற்றை மேற்கொள்கின்றன. இப்பணிக்குழுக்களானது, அந்தந்த பணிக்குழுக்களில் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் விதமாக, அவர்களின் துறை சார்ந்த இலக்குகளைக் கொண்ட பணிக்குழுக்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, இப்பணிக்குழுக்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

மேலும், தொடர்புடைய துறைகள் பணிக்குழுவில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளன. மாநிலத் திட்டக் குழுவின் குழுமத் தலைவர்கள் உறுப்பினர் அமைப்பாளர்களாக உள்ளனர். இந்த பணிக்குழுக்கள் ஒவ்வொன்றும் அனைத்து வெவ்வேறு துறைகளையும் உள்ளடக்கியதாகவும் அரசின் உயர் மட்டத்தில் முடிவுகள்

மேற்கொள்வதற்கான விவரங்களை அளிக்கக் கூடியதாகவும், அனைத்து துறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் அம்சங்களை மேற்பார்வையிடுவதாகவும் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான பணி வரையறைகளை நிறைவு செய்திடும் வகையிலும் உள்ளன. மாநிலத்தில் துறைத் தலைவர்கள் / பொதுத்துறை நிறுவனங்கள் பணிக்குழுக்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளுக்கு இணைந்து செயல்பட வேண்டும்.

### 3.1.6.2 தமிழ்நாட்டின் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தொலைநோக்கு ஆவணம்

பணிக்குழுக்களுக்கான பணி வரையறையில் முக்கியமான ஒரு பொறுப்பு ஒவ்வொரு இலக்கிற்கும் தொலைநோக்கு ஆவணம் தயார் செய்ய வேண்டியது. இந்த தொலைநோக்கு ஆவணத்தின் குறிக்கோள், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் குறிகாட்டிகளில் மாநிலத்தின் நிலைமையை எடுத்துக்காட்டுவதோடு, தமிழகத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான பொருத்தமான உத்திகளையும் செயல் திட்டங்களையும் வடிவமைத்து வழங்குவதாகும்.

பணிக்குழுக்களின் கூட்டங்களும் மற்றும் உறுப்பினர் அமைப்பாளர்கள் அளவில் பங்கு பெறும் கூட்டங்களும் நடத்தப்பட்டு, அந்தந்த இலக்குகளுக்கான வரைவு

தொலைநோக்கு ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டக் குழு இந்த ஆவணத்தின் பல்வேறு அத்தியாயங்களைத் தொகுத்து ஒரு விரிவான ஆவணமாக தயாரித்து விரைவில் வெளியிடப்படவுள்ளது.

### 3.1.6.3 மாநில / மாவட்ட / வட்டார குறிகாட்டி வரையறை

புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள தேசிய குறிகாட்டி வரையறையை அடிப்படையாகக் கொண்டு, தொடர் ஆலோசனைக் கூட்டங்கள் தொடர்புடைய துறைகளின் செயலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்புடன் மாநிலத்திற்கான குறிகாட்டி வரையறை இறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் இறுதி செய்யப்பட்டவாறு, 314 குறிகாட்டிகளுடன் கூடிய தமிழ்நாடு மாநில குறிகாட்டி வரையறை எனும் ஆவணத்தினை புள்ளியியல் மற்றும் பொருளியியல் துறையானது மாநில திட்டக்குழுவுடன் இணைந்து வெளியிட்டுள்ளது.

மேலும், இதில் மாவட்ட அளவில் தரவுகளை கொண்டுள்ள 104 குறிகாட்டிகளும் வட்டார அளவில் தரவுகளை கொண்டுள்ள 93 குறிகாட்டிகளும் கண்டறியப்பட்டு, இறுதி செய்யப்பட்டுள்ளன.

இந்த மாநில குறிகாட்டி வரையறையானது, செயல்படுத்தப்படும் திட்டங்களின் தேவைக்கேற்ப குறிகாட்டிகளை சேர்த்தோ அல்லது நீக்கியோ திருத்தி அமைக்கப்படக் கூடும்.

### 3.1.6.4 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான இணையதளம் மற்றும் கண்காணிப்புப் பலகை

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது கண்காணிப்பு பலகையுடன் கூடிய பிரத்யேக இணைய தளத்தினை துறைகள் மற்றும் மாநிலத்திற்கான குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகளுக்கான தரவுகளை சேகரிக்கவும் அவற்றின் வளர்ச்சியைக் கண்காணிக்கும் பொருட்டும் உருவாக்கியுள்ளது.

தொடர்புடைய ஒவ்வொரு துறைக்கும் அத்துறைகளுக்கான குறிகாட்டிகளின் தரவுகளை அத்துறை அலுவலர்களே நேரடியாக பதிவேற்றம் செய்வதற்காக இணையதள பயனாளர் நுழைவு குறியீடு உருவாக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தரவு மைய புள்ளியாக உள்ள பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை இந்த இணையதளத்தை பராமரித்திடும் பொறுப்பினை மேற்கொள்கிறது. துறைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பயனாளர் நுழைவு குறியீட்டின் வாயிலாக, மாநில குறிகாட்டி

வரையறையில் உள்ள அனைத்து குறிகாட்டிகளுக்கான தரவுகள் அவ்வப்போது அந்தந்த துறைகளால் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மாவட்ட மற்றும் வட்டார குறிகாட்டிகளுக்கான தரவுகளும் இவற்றில் பதிவேற்றம் செய்வதற்கான வசதிகள் உள்ளது. இக்கண்காணிப்பு பலகையானது நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாநிலம் முதல் உள்ளூர் வரை எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறிவதற்கான ஒரு கருவியாகும். இந்த இணையதள வாயிலான தரவுகளின் கண்காணிப்பு முறை சீரிய முறையில் செயல்பட, தொடர்புடைய துறைகள் அவைகளுக்குரிய குறிகாட்டிகளின் தரவுகளை, அவற்றின் காலமுறையில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்ய வேண்டியது அவசியமாகும்

**3.1.6.5 துறைகளில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் அலகு**

ஒவ்வொரு நிருவாகத் தொடர்புத் துறையிலும் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதில் கவனம் செலுத்துவதற்கான அமைப்பு மற்றும் வழிமுறைகளை செயல்படுத்தும் பொருட்டு நிருவாகத் துறை அலுவலர்கள் மற்றும் துறைத் தலைமைகளின் அலுவலர்களையும் உள்ளடக்கியதான நீடித்த வளர்ச்சி இலக்குகள் அலகு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நீடித்த வளர்ச்சி இலக்கு அலகுகள், துறைகளுக்கு உதவியாகவும் நீடித்த வளர்ச்சி இலக்கு பணிகளில் துறைகளின் செயல்பாட்டினை செம்மைப்படுத்துவதாகவும் உள்ளது. துறைகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான அலகுகள், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, பணிக்குழுக்கள், மாநில, மாவட்ட மற்றும் கள அலுவலகங்களுடனும் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் செயலாற்றி வரும் இதர நிறுவனங்களுடனும் மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக அவ்வப்போது ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றன.

**3.1.6.6 நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான உயர் மட்டக் குழு, மாவட்ட அளவிலான செயற்குழு மற்றும் மாவட்டங்களில் நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவுகள்**

நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாவட்டங்களின் செயல்பாடே மாநிலத்தின் ஒட்டுமொத்த செயல்பாடாக பிரதிபலிக்கிறது. மேலும், மாநிலத்தின் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றமானது, மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும், கிராம அளவிலும் மற்றும் பெருநகரம்/நகராட்சி/பேரூராட்சி அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குவதை பொருத்தே உள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர் மயமாக்குதலை நிறைவேற்றிடும் பொருட்டு, நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான உயர் மட்டக் குழு, மாவட்ட அளவிலான செயற்குழு மற்றும் மாவட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அ) அந்தந்த மாவட்டத்தினைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழுவின் தலைவராகவும், மாவட்ட ஆட்சியர் உறுப்பினர் செயலராகவும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அதன் அமைப்பாளராகவும் உள்ளனர். மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய துறைகளின் மாவட்ட அலுவலர்கள் இதன் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

ஆ) நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான செயற்குழுவிற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராகவும் மாவட்ட திட்ட அலுவலர் உறுப்பினர் அமைப்பாளராகவும் மற்றும் மாவட்ட புள்ளியியல் துறை துணை இயக்குநர் அதன் தரவு ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளனர். நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாவட்ட அளவிலான செயற்குழுவின் வரையறை செய்யப்பட்டுள்ள விதிமுறைகள்,

மாநில அளவில் உள்ள பணிக்குழுக்களைப் போலவே, மாவட்ட மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட நிலைகளுக்குப் பொருந்தக்கூடிய அனைத்து இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறிகாட்டிகளை உள்ளடக்கியது.

இ) மாவட்ட அளவிலான நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவானது மாவட்டத்திற்கு உறுதுணை அமைப்பாகவும் கண்காணிப்பு அமைப்பாகவும் உள்ளது. இதற்கு தரவு மேலாளராக உள்ள புள்ளியியல் துணை இயக்குநர் தலைவர் ஆவார். மாவட்ட திட்ட அலுவலர் இதன் அமைப்பாளராக உள்ளார்.

மாவட்ட அளவிலான நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவானது, அதற்கான கண்காணிப்பு பலகையில் அனைத்து தரவுகளும் பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்திடவும், மாவட்ட அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய மாவட்ட அளவிலான குழுவின் வழிகாட்டுதல்களை முன்னெடுப்பதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

### 3.1.6.7 நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு - மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் தரவரிசை

இந்திய அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030ஆம் ஆண்டிற்குள் எட்டப்படுவதற்கான பணிகளை மேற்பார்வை

செய்திடும் முகமையாக உள்ள ஒன்றிய அரசின் நித்தி ஆயோக் அமைப்பால், நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு எனும் அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

உலகளாவிய இலக்குகளை அடைவதை நோக்கி மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிப்பதும், அதிக கவனம் தேவைப்படும் முன்னுரிமைப் பகுதிகளை அடையாளம் காண்பதில் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களை ஆதரிப்பதும் குறியீட்டின் நோக்கமாகும். இந்த அறிக்கையானது மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் புள்ளிவிவர அமைப்பில் உள்ள தரவு இடைவெளிகளை எடுத்துக்காட்டுகிறது மற்றும் முக்கியமான, அடிக்கடி தரவு சேகரிக்கப்பட வேண்டிய துறைகளையும் அடையாளம் காட்டுகிறது. இதன் மூன்றாம் பதிப்பான, நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு 3.0 (2020-21), சூன், 2021ல் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் குறிகாட்டிகளில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் கண்டறியப்பட்ட குறிகாட்டிகளின் செயல்பாட்டின் அடிப்படையில் அவற்றினை தரவரிசைப்படுத்தி வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையில் தமிழ்நாடு 74 ஒட்டு மொத்த குறியீட்டு புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளது.

இந்த அறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு மற்றும் பற்பரிமாண வறுமை குறியீடு தொடர்பான மாநில அளவிலான பணிப்பட்டறை 2021ஆம் ஆண்டு சூலை மாதம் 12 மற்றும் 13ஆம் தேதிகளில் சென்னை தலைமைச் செயலகத்தில், நித்தி ஆயோக் அமைப்புடன் இணைந்து, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையால் நடத்தப்பட்டது. இந்த பணிப்பட்டறையில், மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் தரவரிசைக்கு எடுக்கப்பட்ட குறிகாட்டிகள் மற்றும் தரவு கணக்கிடப்படவுள்ள கால வரையறை, தரவுகளுக்கான ஆதாரம் ஆகியவைக் குறித்து விரிவான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.1.6.8. நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு-4.0 பணிப்பட்டறை

நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு 4.0-ற்காக உத்தேசிக்கப்பட்ட குறிகாட்டிகள் குறித்த மாநிலத்தின் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்காக, 2022 ஜனவரி 04 மற்றும் 05 ஆகிய தேதிகளில், சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய மாநிலத் திட்டக் குழுவால் சென்னையில் இரண்டு நாள் மாநில அளவிலான பணிப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பணிப்பட்டறையில் நித்தி ஆயோக் அமைப்பின் ஆலோசகர்

(நீடித்த வளர்ச்சி இலக்கு) அவர்களின் தலைமையிலான குழுவினர் குறியீட்டிற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள், தரவு கணக்கிடப்படவுள்ள ஆண்டு, தரவுகளின் ஆதாரம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து விளக்கப்படக் காட்சி மூலமாக கலந்துரையாடல் மேற்கொண்டனர். மேலும், தேசிய குடும்ப நலக் கணக்கெடுப்பு 5 (2019-20)ன் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள பற்பரிமாண வறுமை குறியீடு மற்றும் அதன் அம்சங்கள் குறித்து தொடர்புடைய துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

மாநிலத்திற்கான உத்தேசிக்கப்பட்ட குறிகாட்டிகள் மற்றும் தரவுகளுக்கான கால வரையறைக் குறித்து (அனைத்து துறைகளால்) தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் தொகுக்கப்பட்டு, உரிய பரிசீலனைக்காக நித்தி ஆயோக் அமைப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீடு 4.0 விரைவில் நித்தி ஆயோக் அமைப்பால் வெளியிடப்படவுள்ளது.

### 3.1.6.9 திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகளை கண்காணிப்பதற்கான வரையறை (Output Outcome Monitoring Framework (OOMF))

ஒன்றிய அரசின் நித்தி ஆயோக் அமைப்பின் ஒரு அங்கமான வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அலுவலகம் (DMEO) திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகளைக் கண்காணிப்பதற்கான வரையறை (OOMF)-ஐ தயாரித்துள்ளது. இந்த வரையறையை பல்வேறு மாநிலங்களும் திட்டங்கள் மற்றும் திட்டங்களுக்கான திட்டமிடல் மற்றும் வெளியீடு, விளைவுகளைக் கண்காணிப்பதற்கான ஒரு முக்கிய கருவியாக இதனை பயன்படுத்த முயற்சித்துள்ளன. இதன் முக்கிய நோக்கங்கள், சிறந்த நிதி மேலாண்மை மற்றும் மேற்பார்வைக்கு அனுமதிப்பதால், அரசாங்கத்தின் நிதியைப் பயன்படுத்துவது குறித்து பங்குதாரர்களிடையே சிறந்த புரிதலை மேம்படுத்துவதாகும். இதன் மூலம் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயலாக்கத்திற்கான இலக்கு நோக்கிய அணுகுமுறையை உருவாக்குவதும் சாத்தியமாகிறது.

இச்சூழ்நிலையில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, இந்த வரையறையை (OOMF) நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களைச் செயல்படுத்துதலில் திட்டமிடுதல் மற்றும் கண்காணிப்பிற்கான ஒரு கருவியாகவும் மற்றும் அதன்

மூலம் சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றின் குறிக்கோள்களை அடைவதற்குரிய வழிமுறையாகவும் பயன்படுத்திட உத்தேசித்துள்ளது. இந்த வரையறையை மாநில நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான குறிகாட்டிகளுக்கான வரையறையுடன் இணைக்கலாம்.

இது குறித்து, தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு விளக்கிடும் பொருட்டு பிப்ரவரி, 2022இல் மாநிலத் திட்டக்குழுவில் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

மேலும், நித்தி ஆயோக் அமைப்பின் ஒரு அங்கமான, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அலுவலகத்தின் (DMEO) மூலமாக பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறையானது மாநிலத் திட்டக்குழுவுடன் இணைந்து 09.02.2023 மற்றும் 10.02.2023 அன்று அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியில் நடத்தப்பட்ட பணிப்பட்டறையில் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கு தொடர்புடைய துறைகளிலிருந்து உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்த பணிப்பட்டறையைத் தொடர்ந்து, தொடர்புடைய துறைகள் அந்தந்த துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் வெளியீடு மற்றும் அவற்றின் விளைவுகளை மதிப்பிடுவதற்கான வரையறையை வரும் ஆண்டுகளில் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.1.7 கொள்கை ஆவணங்களைத் தயாரித்தல்

தமிழகத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் பகுதிகளில் ஒன்பது கொள்கை ஆவணங்களைத் தயாரிக்கும் பணி மாநிலத் திட்டக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுகாதார உரிமைக் கொள்கை, திருநர்+ (LGBTQIA+) கொள்கை, பொருளாதாரத்திற்கான தொழில்மயமாக்கல் கொள்கை ஆகிய மூன்று கொள்கைகள் மாண்புமிகு முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், அவை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. வீட்டுவசதி, நிலப்பயன்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் திறன், நீர்வளம், கழிவு மேலாண்மை மற்றும் சமூக நீதி தொடர்பான பிற கொள்கைகள் முடிவுறும் நிலையில் உள்ளன. அவை உரிய நேரத்தில் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும்.

### 3.1.8 தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள்

மாநிலத் திட்டக் குழுவானது, அரசின் முதன்மைத் திட்டங்களுக்கான தாக்க மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், சிறந்த பொதுச் சேவை வழங்கலுக்கான திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும்

மேற்கொள்ளப்படுகிறது. மாநில திட்டக்குழு பின்வரும் திட்டங்களுக்கான தாக்க மதிப்பீட்டு ஆய்வுகளை நடத்தியது:

- மகளிருக்கான கட்டணமில்லா நகரப்பேருந்து பயணத் திட்டம்
- இல்லம் தேடிக் கல்வி
- மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்

### 3.2 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையானது தலைமை புள்ளிஇயல் நிறுவனமாக செயல்படுகிறது மற்றும் மாநிலத்தின் ஒட்டுமொத்த புள்ளிஇயல் விவர செயல்பாடுகளை ஒருங்கிணைத்து முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் தரமான புள்ளி விவரங்களை வழங்குகிறது. மேலும், கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும், பல்வேறு சமூக பொருளாதார மாறுபாடுகள் குறித்த நம்பகமான, போதுமான மற்றும் சரியான நேரத்தில் தகவல்களைத் மாநில மற்றும் ஒன்றிய அரசுக்கும் இத்துறை வழங்குகிறது.

#### 3.2.1 துறையின் செயல்பாடுகள்

இத்துறையின் முக்கிய பணியானது, வேளாண் புள்ளி விவரங்கள், தொழில்துறை புள்ளி விவரங்கள், வீட்டுவசதி புள்ளி விவரங்கள், விலைப் புள்ளி விவரம், மாநில வருவாய் போன்றவற்றின் தரவுகளை சேகரித்தல், தொகுத்தல், பகுப்பாய்வு செய்து அறிக்கைகள் வெளியிப்படுகிறது. சமூக பொருளாதார ஆய்வுகள் முறையான மாதிரி சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்தி, அர்ப்பணிப்புள்ள களப்பணியாளர்களை கொண்டு தரவுகள் சேகரிக்கப்படுகிறது.

மேலும், மாநில வருவாய், மாவட்ட வருவாய், பயிர் மதிப்பீட்டாய்வு, தொழில் உற்பத்திக் குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண் மற்றும் மொத்த விலை குறியீட்டெண் போன்ற பல்வேறு பொருளாதார அளவுருக்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல், பல்வேறு வேளாண்மை மற்றும் தொழிற்புள்ளிஇயல் திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல், மாநில மற்றும் ஒன்றிய அரசுகளால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் கணக்கெடுப்புகள் மற்றும் சமூக பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் தலையாயப் பணியாகும். ஆண்டு தோறும், தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு மற்றும் தமிழ்நாடு பருவம் மற்றும் பயிர் அறிக்கை துறையினால் வெளியிடப்படுகிறது. ஐந்தாண்டுக்கு ஒருமுறை வேளாண் கணக்கெடுப்பு/ பொருளாதாரக் கணக்கெடுப்பு மேற்கொண்டு அறிக்கைகளை வெளியிடுவதும், திட்டவாரியான மாதாந்திர மற்றும் ஆண்டறிக்கைகள் இத்துறையால் வெளியிடப்படுகிறது. இவ்வறிக்கைகளின் முடிவுகள் மாநில அரசின் பல்வேறு துறைகளாலும், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பொது மக்களாலும் பயன்படுத்தப்படுகிறது. இத்துறையிலுள்ள திறமையான தொழில் நுட்ப அலுவலர்கள், மாற்று பணியில் தொடர்புடைய துறைகளில் பணிபுரிந்து அத்துறைகளால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் மற்றும்

சமூக பொருளாதார திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்வதில் பயனுள்ள பங்கை ஆற்றி வருகின்றனர்.

தற்போது அனைத்து மாநிலங்களும், சிறந்த ஆளுமை மற்றும் பொது மக்களுக்கு சேவையை வழங்குவதற்கு, ஆதார அடிப்படையிலான கொள்கைகளை செயல்படுத்த துவங்கியுள்ளன. இவ்விலக்கை அடைய அரசு இத்துறையில் தரவு பகுப்பாய்வு மையம் அமைத்துள்ளது.

### 3.2.2 துறையின் முயற்சிகள்

#### 3.2.2.1 புள்ளி விவர பகுப்பாய்வு பிரிவு (DAU)

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, தமிழ்நாடு மின்ஆளுமை முகமையுடன் இணைந்து புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மையம் புள்ளி விவரங்கள் அடிப்படையிலான உள்ளீடுகளை, உயர்மட்டக் கொள்கைகளை உருவாக்கும் அமைப்புகளுக்கு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பை அளிக்க உதவுகின்றது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் புள்ளி விவர பகுப்பாய்வுப் பிரிவு உலக சூழலுக்கேற்ப புள்ளி விவரங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவைகளைச் சிறப்பாக ஆய்வு செய்யும் ஒரு பிரிவாகவும் செயல்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் செயல்பாட்டின் போது உருவாகும் அளவற்ற புள்ளி

விவரங்களை ஆராய்ந்து அரிதாக ஒழுங்கமைக்கப்பட்ட அவற்றின் மூலம் செயல்படுத்தக்கூடிய பயனுள்ள அறிக்கைகளை அளிக்கிறது. இந்தியாவில் இதுபோன்ற மையத்தினை நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

நவீன தகவல் தொழில்நுட்பங்களை மற்றும் பயன்பாட்டு மென்பொருளைப் பயன்படுத்தி தொடர்புடைய புள்ளி விவரங்களை அனுமான அடிப்படையிலான பகுப்பாய்வு செய்து விரைவில் முடிவெடுக்க இம்மையம் உதவுகிறது.

புள்ளிவிவர பகுப்பாய்வு மையம் பின்வரும் நான்கு ஆய்வுத் திட்டங்களை ஜெ-பாலுடன் (தெற்கு ஆசியா) இணைந்து செயல்படுத்தி முடித்துள்ளது.

(i) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையால் வழங்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் (CMCHIS) கூற்றுகளின் தரவரிசைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

(ii) உள்ளாட்சி அமைப்புகளின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்து ஐந்தாவது மாநில நிதி ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

(iii) காணாமல் போன நபர்களின் புள்ளி விவரங்களை வைத்து அடையாளம் காணப்படாத இறந்த உடல்களுடன் ஒப்பிட்டு, காவல் துறையின் மாநில குற்ற ஆவணக் காப்பகத்திற்காக பகுப்பாய்வு செய்யப்பட்டது-

(iv) சென்னை பெருநகர காவல்துறைக்கு அவசர கால எண் 100ல் பெறப்பட்ட அழைப்புகள் தொடர்பான விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

சம்பந்தப்பட்ட துறைகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட இரண்டு ஆய்வுத் திட்டங்களுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

I. புவியியல் தகவல் அமைவிடப் பரப்பு சார்ந்த புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி குற்ற வரைபடம் தயாரிக்கவும், குற்றப் பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் குற்றம் நடைபெற்ற இடத்தினை அறியவும் காவல்துறையின் மாநில குற்ற ஆவணக் காப்பகம் மூலம் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

II. இயந்திரங்கள் வழி கற்பித்தல் வாயிலாக தமிழ்நாட்டில் சரக்கு மற்றும் சேவை வரி சேகரிப்பை

மேம்படுத்த வணிகவரி மற்றும் பதிவுத் துறை மூலம் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டன.

### 3.2.2.2. தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வு (TNHPS)

தமிழ்நாட்டில் உள்ள குடும்பங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்வது இவ்வாய்வின் நோக்கமாகும். தனிநபர் மற்றும் குடும்பங்கள் ஆகியவற்றை முக்கிய ஆதாரமாகக் கொண்டு சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியைக் கண்டறியும் வகையில் இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் சவால்களுக்கான உரிய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வடிவமைப்பதற்கு இவ்வாய்வு விவரங்கள் பேருதவியாக இருக்கும்.

தமிழ்நாடு குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் ஆய்வுத் திட்டத்திற்கு அரசாணை (நிலை) எண்.19, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி.கு) துறை, நாள் 26.02.2016 மூலம் தமிழக அரசு ஒப்புதல் அளித்து தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து ரூ. 390.00 இலட்சம் மொத்த திட்ட மதிப்பு தொகையாக மூன்று ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டம்:- முன் அடிப்படை ஆய்வு / வீடுகளைப் பட்டியலிடுதல், இரண்டாம் கட்டம்:- அடிப்படை ஆய்வு மற்றும் மூன்றாம் கட்டம்:- இறுதி நிலை ஆய்வு. இந்த ஆய்வு சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இவ்வாய்வின் முக்கிய அம்சமானது கணக்கெடுப்பில் கை அடக்கக் கணினியைப் (Tablets) பயன்படுத்தி டிஜிட்டல் பயன்முறையில், அதாவது கணினி உதவி தனிப்பட்ட நேர்காணல் (CAPI) முறையில் புள்ளிவிவரம் சேகரிக்கப்படுகிறது.

முன் அடிப்படை ஆய்வு / வீடுகளைப் பட்டியலிடும் பணி 2018-ல் நிறைவடைந்து மொத்தம் 2,51,594 குடும்பங்கள் கணக்கிடப்பட்டுள்ளன. மேலும், வீடுகளைப் பட்டியலிடுதலில் புதியதாக இரண்டு / மூன்றாகப் பிரிக்கப்பட்ட மாவட்டங்களிலும் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலும் மொத்தம் 42,452 குடும்பங்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஜனவரி 2022-இல் நிறைவடைந்தது. முன் அடிப்படை ஆய்வு அறிக்கை செப்டம்பர் 2022-இல் வெளியிடப்பட்டது.

இக்கணக்கெடுப்பின் 2022-2023-ஆம் ஆண்டிற்கான அடிப்படை ஆய்வு தற்போது அனைத்து மாவட்டங்களிலும்

நடத்தப்பட்டு முடிவடைந்துள்ளது. தரவுகள் கூர்ந்தாய்வு மற்றும் செயலாக்கப் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 3.2.2.3 தமிழ்நாடு கோவிட் களநிலவர ஆய்வு (TNCPS)

தமிழ்நாடு கோவிட் களநிலவர ஆய்வு என்பது 2020-2021-ஆம் ஆண்டில் உலகளாவிய தொற்று நோய்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக ஒருவருட காலத்திற்கு (ஒவ்வொரு 3-4 மாதங்களுக்கு ஒருமுறை) மாநிலத்தில் தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப்பட்டியல் (TNCPS) ஆய்வின்கீழ் உள்ள மாதிரி வீடுகளில் வழக்கமான இடைவெளியில் நடத்தப்படும் விரைவான பதில் தொலைபேசி கணக்கெடுப்பாகும், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை சென்னை வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து மாநில அளவில் விரைவான மறுமொழி பெற தொலைபேசி வாயிலாக இக்கணக்கெடுப்பை நடத்தியது.

வேலை நிலை (வேலை இழப்பு) மற்றும் வீட்டு வருமானம் போன்ற முக்கிய குறியீடுகள் குறித்த புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் பொருட்டு எண்ணிக்கை வழிமுறை பயன்படுத்தப்பட்டது. இத்தொற்றுநோய் காலத்தில் நேர்காணல் அட்டவணையை நிர்வகிக்க கணினி உதவி தொலைபேசி நேர்காணல் முறை (CATI)

பயன்படுத்தப்பட்டது. உலகளாவிய கோவிட் தொற்றுநோயின் மோசமான தாக்கத்தை மாற்றியமைக்கத் தகுந்த கொள்கை நடவடிக்கைகளை வடிவமைக்க கோவிட் கள நிலவர ஆய்வின் முதன்மை நோக்கத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரசுக்கு உடனடி நம்பகமான பயனுள்ள தரவுகளை கொண்ட அறிக்கைகள் ஜூலை 2020, அக்டோபர் 2020, பிப்ரவரி 2021 மற்றும் அக்டோபர் 2021-இல் அளிக்கப்பட்டது.

### 3.2.2.4 தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை குறித்த குழுப்பட்டியல் ஆய்வு (TNEPS)

தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை குறித்த குழுப்பட்டியலின் (TNEPS) நோக்கமானது வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை, உடல் ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக மற்றவர்களைச் சார்ந்திருத்தல், அறிவாற்றல் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை உள்ளடக்கிய சுகாதார நிலையை அறிதல் மற்றும் சுகாதார அமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு மற்றும் அணுகுமுறை ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்வதாகும். வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலையினைக் குறித்து தரவு தளம் உருவாக்கப்பட்டு வயது முதிர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த தேவைப்படும்

இலக்குகளை அடைய ஒரு தனித்துவமான தளத்தை இந்த ஆய்வு வழங்கும்.

வயதானவர்களுக்கு பொருத்தமான ஆதாரம் அடிப்படையில் கொள்கைகளை வடிவமைப்பதற்கும், முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்கும் இந்த ஆய்வு உதவுகிறது. சமூக பாதுகாப்புக் கொள்கை மற்றும் செயல்முறைத் திட்டத்தின் தலையீடுகளை வடிவமைப்பதற்கும், ஆராய்ச்சிக்கான தளத்தை உருவாக்குவதற்கும் இந்த ஆய்வு உதவுகிறது.

இந்த குழு ஆய்வு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் தெற்கு ஆசியா, (J-PAL-SA) நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து எட்டு ஆண்டுகள் தொடர் ஆய்வாக இரண்டு வருட கால இடைவெளியுடன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது. J-PAL-SA நிறுவனமானது, இந்த ஆய்விற்கு தொழில்நுட்ப ஆலோசகராக செயல்படுகின்றது.

இந்த கணக்கெடுப்பில் கை அடக்கக் கணினியைப் (Tablets) பயன்படுத்தி டிஜிட்டல் பயன்முறையில், அதாவது கணினி உதவி தனிப்பட்ட நேர்காணல் (CAPI) முறையில் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

இந்த கணக்கெடுப்பின் கீழ் சுகாதார அளவீடுகள் மற்றும் உயிர் குறிப்பான்கள் முதன்முறையாக தமிழ்நாட்டில் சேகரிக்கப்படுகின்றன. இக்கணக்கெடுப்பில், நோய்சுமை, மனநலம் மற்றும் செயல்பாட்டு ஆரோக்கியம், சுகாதாரப் பாதுகாப்பு, முதியோரின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வு குறித்த நம்பகமான அறிவியல் தகவல்களும் இதில் அடங்கும்.

தமிழ்நாடு வயது முதிர்ந்தோர் சமூக பொருளாதார நிலை குறித்த குழுப்பட்டியல் ஆய்வுக்கு அரசாணை (நிலை) எண்.21, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 27.02.2016-இன் மூலம் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்து மொத்த திட்டத் தொகையாக ரூ.606.00 இலட்சம் புத்தாக்க முயற்சிகள் திட்டத்திலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனித மேம்பாட்டு குறியீடு மற்றும் சார்பு விகிதத்தின் அடிப்படையில் கணக்கெடுப்புக்கு சென்னை (பெருநகர சென்னை பகுதி), திருவண்ணாமலை, தர்மபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த 5 மாவட்டங்களில் வீடுகளைப் பட்டியலிடும் பணி ஜூலை 2018 மத்தியில் நிறைவடைந்து சுமார் 92,000 குடும்பங்கள் ஆய்வு மூலம் கணக்கெடுக்கப்பட்டன.

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை அலுவலர்களால் 4739 வீட்டு பட்டியலில், 6294 முதியோர்களிடம் இவ்வாய்வு தொடர்பான முன் அடிப்படை கணக்கெடுப்பு 2019 ஜூன் மாதம் நிறைவு செய்யப்பட்டது. இதில் 4496 வயதான முதியவர்களிடமிருந்து சுகாதார அளவீடுகளைப் பொது சுகாதாரத் துறை சேகரித்துள்ளது. அடிப்படை கணக்கெடுப்பின் முடிவுகள் சார்புத் துறைகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. 3881 குடும்பங்களிலிருந்து 4892 முதியோர்களுக்கான அலை-1 கணக்கெடுப்பு முடிக்கப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.

### 3.2.2.5 வாக்காளர்களின் அறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்த ஆய்வு (KAP)

வாக்காளர் அறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்த அடிப்படை கணக்கெடுப்பு (KAP) இந்திய தேர்தல் ஆணையத்தால் முன்மொழியப்பட்டதுபோல் முறையான வாக்காளர் கல்வி மற்றும் தேர்தலில் பங்கேற்பு திட்டம் (SVEEP) குறித்த ஆய்வு, தமிழ்நாடு சட்டமன்ற மாநிலத் தேர்தல்- 2021-க்கு முன்னர் பொருள்இயல் மற்றும் புள்ளி இயல் துறையால் நடத்தப்பட்டு, 18.02.2021 அன்று தமிழகத்தின் தலைமை தேர்தல் அதிகாரியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வடிப்படைக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து, இந்திய தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்ட முறையான வாக்காளர்கள் கல்வி மற்றும் தேர்தலில் பங்கேற்பு திட்டத்தின் (SVEEP) வாயிலாக பெறப்பட்ட கருத்தின் அடிப்படையில், தமிழ்நாடு சட்டமன்ற மாநிலத் தேர்தல்-2021-க்குப் பிறகு, தமிழ்நாட்டில் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை (DOES) மூலம் முடிவுநிலை ஆய்வு நடத்தப்பட்டது. 23.11.2022 அன்று தலைமை தேர்தல் அதிகாரியிடம் முடிவு நிலையின் வரைவு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 3.2.3 துறையின் புதிய முயற்சிகள்

#### 3.2.3.1 வெளிப்படையான புள்ளி விவரங்கள்

தமிழக அரசின் வெளிப்படையான அரசு புள்ளி விவரங்கள் (TNOGD) திட்டத்தின் வடிவமைப்பாக (Nodal Organization) இந்திய அரசின் தேசிய புள்ளி விவர பகிர்வு மற்றும் அணுகும் கொள்கையுடன் (NDSAP) இணைந்து பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை செயல்படுகிறது. TNOGD திட்டத்திற்காக https://tn.data.gov.in M/S ELCOT நிறுவனத்தினரால் இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது. TNOGD அரசாங்க புள்ளி விவரங்களை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றை

ஊக்குவிக்கிறது. துறைகள் மற்றும் பயனாளிகள் புள்ளி விவரங்களை பதிவிறக்கம் செய்து காட்சிப்படுத்த முடியும் என்பதால், ஒரே இடத்தில் இணையத்தில் புள்ளி விவரங்களை பொதுமக்களுக்கு வெளியிட இந்த இணையதளம் பயனுள்ளதாக இருக்கும். பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் வெளியிடப்படும் புள்ளிஇயல் கையேடு 2009 முதல் 2019 வரை, 11 ஆண்டுகளுக்கான புள்ளி விவரங்களை TNOGD இணையதளத்தில் வழங்கியுள்ளது. இவற்றை பகுப்பாய்வு நோக்கங்களுக்காக பதிவிறக்கம் செய்யப்படும் வகையில் பகிரக்கூடிய வடிவத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாவட்டப் புள்ளிஇயல் கையேடுகளும் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. புள்ளிஇயல் கையேட்டில் 42 அத்தியாயங்களுடன் 200க்கும் மேற்பட்ட நிறுவனம்/ துறைகளிலிருந்து பெறப்பட்ட புள்ளி விவரங்களை உள்ளடக்கியுள்ளது.

**3.2.3.2 வலைத்தளம்**

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறைக்கான வலைத்தளம் M/S ELCOT நிறுவனம் மூலம் உருவாக்கப்பட்டு 2021-22ஆம் ஆண்டு முதல் https://des.tn.gov.in வலைத்தள முகவரியில் செயல்பட்டு வருகிறது.

### 3.2.4 சமூக புள்ளிஇயல்

#### 3.2.4.1 தேசிய மாதிரி ஆய்வு

தேசிய மாதிரி ஆய்வு சமூக பொருளாதார ஆய்வுகளில் முக்கியமானது, தேசிய புள்ளிஇயல் அலுவலகம், மத்திய அரசின் தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் அடுத்தடுத்த சுற்றுகளில் நடத்தப்பட்ட ஒரு சமூக பொருளாதார ஆய்வு ஆகும். முதல் கணக்கெடுப்பு 1950 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல்வேறு நிலைகள் கொண்ட ஓரடுக்கு வடிவமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கணக்கெடுப்பு பல்வேறு பொருட்கள் குறித்து சேகரிக்கப்பட்ட மாதிரி தரவுகளின் அடிப்படையில் மதிப்பீடுகளை வழங்குகிறது. இந்த கணக்கெடுப்பில் தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு முதல் 18 ஆம் சுற்றிலிருந்து கலந்து கொள்கிறது.

ஒவ்வொரு சுற்றும் வெவ்வேறு தலைப்புகள் கொண்டது. சில முக்கியமான உள்ளடக்கிய தலைப்புகள்

1. வீட்டு நுகர்வோர் செலவினங்கள்
2. வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை
3. ஒருங்கிணைக்கப்படாத விவசாயம் சாரா நிறுவனங்கள்
4. நிலம் மற்றும் கால்நடை உரிமையாளர்

5. கடன் மற்றும் முதலீடு
6. சுகாதாரம்
7. கல்வி
8. வீட்டு அமைப்பு
9. நகர்ப்புற குடிசைவாழ்வோர் விவரங்கள்
10. இடம்பெயர்வு
11. உள்நாட்டு சுற்றுலா

இதுவரை தேசிய மாதிரி ஆய்வு 78 சுற்றுகளுக்கான கணக்கெடுப்பு நிறைவு செய்யப்பட்டது. 79 வது சுற்றிற்கான கணக்கெடுப்பு "விரிவான வருடாந்திர மாற்றத் தகுந்த இணக்கமான ஆய்வு (CAMS)" மற்றும் "ஆயுஷ் (AYUSH) பற்றிய ஆய்வு" ஆகிய தலைப்புகளை உள்ளடக்கி களப்பணி நடைபெற்று வருகிறது.

### 3.2.4.2 வீட்டுவசதி புள்ளிஇயல்

தேசிய அளவில் வீட்டுவசதி கொள்கை மற்றும் வீட்டுவசதி திட்ட ஆவணங்களை ஏற்படுத்துவதற்காக பொது மற்றும் தனியார் துறைகளில் வீட்டுவசதி மற்றும் கட்டிடம் சம்பந்தமான செயல்பாடுகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. இந்த தரவு பரவலாக கட்டுமானத்தின் தன்மை மற்றும் வகை, கட்டிடத்தின் சுற்றுப்பரப்பு மற்றும் உட்பரப்பு, வசிப்பிடங்களின் எண்ணிக்கை, குடியிருப்பு மற்றும்

மதிப்பிடப்பட்ட செலவு தொகை போன்றவற்றை கொண்டுள்ளது.

பொதுத்துறை விவரங்கள் அரசு கட்டுமான நிறுவனங்களிலிருந்தும் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலிருந்தும் சேகரிக்கப்படுகின்றது. தனியார் துறை விவரங்கள் 151 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து சேகரிக்கப்படுகின்றது. 2020-21 ஆம் ஆண்டு வரையில் ஆண்டறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**3.2.4.3 வீட்டுவசதி மற்றும் கட்டிட புள்ளிஇயல்:**

இத்திட்டம் மத்திய அரசின் திட்டமாகும். புள்ளியியல் அமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் வீட்டுவசதி மற்றும் கட்டிடக் கட்டுமானத் துறை பற்றிய தரவு சேகரிப்பின் ஒத்திசைவான மற்றும் நிலையான அமைப்பை உருவாக்குதல் மற்றும் வீட்டுவசதி மற்றும் கட்டிடக் கட்டுமானம் தொடர்பான தரவுகளை தேசிய அளவில் இணையவழி வாயிலாக தேசிய கட்டிட நிறுவனம் (NBO), வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகம் (MoHUA), புதுதில்லிக்கு அனுப்புதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டில், 2014-15 ஆம் ஆண்டில் தரவு சேகரிப்புக்காக 17 நகரங்கள் (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒரு இலட்சத்திற்கும்

அதிகமான மக்கள் தொகை) இந்தத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

வீட்டுவசதி மற்றும் கட்டிடக் கட்டுமானம் தொடர்பான நடவடிக்கைகள் குறித்த முதன்மைத் தரவுகள், தேசிய கட்டிட அமைப்பு வழங்கிய அறிவுறுத்தல்/வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பரிந்துரைக்கப்பட்ட கால அட்டவணைகளைப் பின்பற்றி வடிவமைக்கப்பட்ட படிவங்களை பயன்படுத்தி மாநிலங்களில் உள்ள பல்வேறு அமைப்புகளிலிருந்து பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் சேகரிக்கப்படுகிறது. டிசம்பர் 2022 காலாண்டு வரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 17 நகரங்களிலிருந்து வீட்டுவசதி மற்றும் கட்டிட புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு இணையவழி வாயிலாக தேசிய கட்டிட நிறுவனம் (NBO) புதுடெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 3.2.4.4 கட்டிடக் கட்டுமான குறியீட்டெண் (BCCI)

முக்கியமான கட்டுமானப் பொருட்களின் விலை விவரங்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் கூலி விவரங்கள் தமிழ்நாட்டில் 16 மாவட்ட மையங்களான சென்னை, காஞ்சிபுரம், கடலூர், வேலூர், சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, விருதுநகர், பாளையங்கோட்டை,

நாகர்கோவில் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் சேகரிக்கப்பட்டு கட்டிடக் கட்டுமான குறியீட்டெண் (அடிப்படை ஆண்டு: 2011-12) ஒவ்வொரு காலாண்டுக்கும் கணிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

### 3.2.5 தொழிற் புள்ளி விவரங்கள்

#### 3.2.5.1 ஆண்டுத் தொழில் ஆய்வு

ஆண்டுத் தொழில் ஆய்வு என்பது உற்பத்தி பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட/ஒழுங்குப்படுத்தப்பட்ட தொழிற் துறை புள்ளி விவரங்களின் முக்கிய ஆதாரமாகும். ஆண்டுதோறும், ஒன்றிய அரசின் தேசிய புள்ளிஇயல் அலுவலகத்தால் ஆண்டுத் தொழில் ஆய்வு கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. மாநிலமும் இந்த ஆய்வில் பங்கேற்கிறது. தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(ii) கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் கணக்கெடுப்பு நடத்துவதற்காக தேர்தெடுக்கப்படுகின்றன. ஆண்டுத் தொழில் ஆய்வில் வெளியிடப்படும் முடிவுகள் மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளின் முக்கிய பண்புகளை உள்ளடக்கியதாகவும், மாநில மற்றும் மாவட்ட அளிவலான தொழில்களின், தேசிய தொழிற்துறை வகைப்பாடு (NIC) 2 மற்றும் 3 இலக்க அளவிலான வகைப்பாட்டின் கீழ் உருவாக்கப்பட்ட 27 முக்கிய குறிகாட்டிகளுக்கான தரவை

இக்கணக்கெடுப்பு வழங்குகிறது. 2019-20 ஆம் ஆண்டுக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது மற்றும் 2020-21ஆம் ஆண்டிற்கான களப்பணி முடிக்கப்பட்டு, தரவுகள் சரிபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 3.2.5.2 தொழில் உற்பத்தி குறியீட்டெண்

தொழில் உற்பத்தி குறியீட்டெண் (அடிப்படை ஆண்டு 2011-12), பொருளாதாரத்தில் தொழில்துறை செயல்திறனின் பொதுவான நிலைமையினை மதிப்பிட உதவுகிறது. ஒவ்வொரு மாதமும், கனிமம், தொழில், மின்சாரம் ஆகிய மூன்று முக்கிய துறைகளிலிருந்து, 253 இனங்களுக்கு உற்பத்தி விவரங்கள் பெறப்பட்டு, உற்பத்தி குறியீட்டெண் கணிக்கப்படுகிறது.

கனிம உற்பத்தி விவரங்கள் 8 இனங்களுக்கு மாநில கனிமம் மற்றும் சுரங்கத் துறை மற்றும் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திலிருந்தும் பெறப்படுகின்றன. தொழிற்துறை உற்பத்தி விவரங்கள் 244 இனங்களுக்கு, நேரடியாக 1244 தொழிற்சாலைகளிடமிருந்து உரிய படிவங்களில் பெறப்படுகின்றன. மின்சார உற்பத்தி, மத்திய மின் வாரியம், புது டெல்லியிலிருந்தும் பெறப்படுகின்றது. இந்த உற்பத்தி விவரங்களைக் கொண்டு துறை வாரியான மற்றும் பயன்பாடு வாரியான குறியீட்டெண்கள் ஒவ்வொரு மாதமும்


கணிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. மாநில தொழில் உற்பத்தி குறியீட்டெண் (SIIP) மாநிலத்திற்கான குறியீட்டெண் நவம்பர் 2022 வரை வெளியிடப்பட்டுள்ளது.

### 3.2.6 வேளாண்மை புள்ளி விவரங்கள் சேகரித்தல்

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, மாநில வேளாண்மை புள்ளிஇயல் ஆணைக்குழுவாக (State Agricultural Statistics Authority – SASA) செயல்பட்டு வருகிறது. வேளாண்மை மற்றும் வேளாண்மைச் சார்ந்த தொழில்களில் பணிபுரியும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மை துறையைச் சார்ந்துள்ளதால், விவசாய புள்ளி விவரங்களைச் சேகரித்தல் மற்றும் பராமரித்தல் மாநில பொருளாதாரத்தினை கண்காணிக்க அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. இத்துறையில் வேளாண்மை புள்ளி விவரம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி, நிலப்பயன்பாடு, நீர்பாசனம், நில உடைமை, பயிர்க் காப்பீடு, விவசாயக்கூலி, விவசாயிகளின் விளைச்சலின் விற்பனை மிகுதி போன்ற அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியது. இவ்விவரங்கள் விவசாயம் சார்ந்த திட்டங்களின் கொள்கை முடிவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுகிறது.

இத்துறையில் கீழ்க்கண்ட பல்வேறு விவசாயம் சார்ந்த புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.2.6.1 பருவமும் பயிரும் அறிக்கை (2021-22)




நிலப்பயன்பாடு, நீர்ப்பாசன ஆதாரங்கள், நீர்ப்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தி விகிதம் மற்றும் மாவட்ட வாரியாக உணவுப் பயிர் மற்றும் உணவல்லாத பயிர்களின் பரப்பு, ஆகியவற்றினை மதிப்பீடு செய்து ஒவ்வொரு ஆண்டும் வெளியீடு செய்யப்பட்டு ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் இதர துறைகளுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது.

மேலும், இவ்வறிக்கையில் மழைப் புள்ளி விவரம், வேளாண் சார்ந்த பொருட்களின் விலைவாசி நிலவரம்,

விவசாயக் கூலி மற்றும் விவசாயப் பொருளாதார குறியீடு ஆகிய விவரங்களும் அளிக்கப்படுகின்றன. 2020-21-ஆம் ஆண்டிற்கான பருவமும் பயிரும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2021-22ஆம் ஆண்டிற்கான அறிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3.2.6.2 பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு**

ஜமாபந்தியில் பயிர்ப் பரப்பு விவரங்கள் இறுதி செய்யப்படுவதற்கு முன்பாகவும், பயிர் அறுவடை பரிசோதனைகளின் அடிப்படையில் இறுதி உற்பத்தி விகிதம் கணக்கிடப்படும் முன்னர், 56 முக்கிய உணவு மற்றும் உணவல்லாத பயிர்களுக்கான பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு செய்யப்பட்டு குறித்த காலங்களில் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

**3.2.6.3 பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டம் (நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள், கரும்பு மற்றும் பருத்தி)**

பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும், உணவு மற்றும் உணவல்லாத 17 முதன்மைப் பயிர்களுக்கு மொத்தம் 9,500 பயிர் அறுவடைப் பரிசோதனைகள் தேர்வு செய்யப்பட்டு, பயிர் அறுவடை

பரிசோதனைகள் வேளாண் துறை அலுவலர்களால் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை அலுவலர்களால் இப்பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்பார்வையிடப்பட்டு வருகின்றன. பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் அடிப்படையில் உற்பத்தி மற்றும் விளைச்சல் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2022-23 (பசலி-1432)ஆம் ஆண்டு 9500 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.2.6.4 பழம் மற்றும் காய்கறி பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகள்

பழம் மற்றும் காய்கறி பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகளின் முக்கிய நோக்கம், பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் ஒவ்வொரு ஹெக்டெர் அளவிற்கு துல்லியமாக கணக்கிடுவதாகும்.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் முக்கிய தோட்டக்கலை பயிர்களான மா, வாழை, பலா, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய 8 பழவகைப் பயிர்களும், தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோஸ் மற்றும் சர்க்கரைவள்ளிக்கிழங்கு ஆகிய 5 காய்கறிப் பயிர்களும் அறுவடைப் பரிசோதனைகளுக்கு

எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2022-23 (பசலி-1432) ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 750 கிராமங்களில், 1500 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| பழங்கள் மற்றும் காய்கறிகள் | உற்பத்தி (டன்களில்) | | |
|---|---|---|---|
| | 2019-20 | 2020-21 | 2021-22 |
| மா | 494728 | 639574 | 481818 |
| வாழை | 3987895 | 3895645 | 3945223 |
| பலா | 50056 | 69007 | 79524 |
| திராட்சை | 33106 | 50009 | 64681 |
| கொய்யா | 41504 | 92609 | 105726 |
| ஆரஞ்சு | 4723 | 2492 | 2394 |
| எலுமிச்சை | 15658 | 34786 | 45226 |
| அன்னாசி | 32463 | 41439 | 21083 |
| தக்காளி | 575141 | 935194 | 815478 |
| வெண்டை | 175243 | 204166 | 184541 |
| கத்தரி | 275956 | 346053 | 278612 |
| முட்டைகோஸ் | 185961 | 251982 | 251525 |
| சர்க்கரை வள்ளிக்கிழங்கு | 14383 | 12920 | 8095 |

### 3.2.6.5 சிறுபான்மைப் பயிர்

சிறுபான்மைப் பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகளின் முக்கிய நோக்கம், பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் ஒரு ஹெக்டெர் அளவிற்கு துல்லியமாக கணக்கிடுவதாகும்.

சிறுபான்மைப் பயிர் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக் கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக்கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய 8 சிறுபான்மைப் பயிர்களுக்கு அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2022-23 (பசலி-1432) ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 665 கிராமங்களில், 1330 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| சிறுபாண்மைப் பயிர் | உற்பத்தி (டன்களில்) | | |
|---|---|---|---|
| | 2019-20 | 2020-21 | 2021-22 |
| மிளகாய் | 29618 | 25057 | 26381 |
| வெங்காயம் | 261835 | 356939 | 398809 |
| மஞ்சள் | 96254 | 97830 | 124917 |


| | | | |
|---|---|---|---|
| உருளைக்கிழங்கு | 84720 | 73014 | 100890 |
| கொத்தமல்லி | 3675 | 1627 | 2364 |
| மரவள்ளிக் கிழங்கு | 3065106 | 3893338 | 3055454 |
| முந்திரி | 25687 | 25459 | 36184 |
| இஞ்சி | 3038 | 5991 | 7369 |

**3.2.6.6 பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்**

"**பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்**" கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு உதவி வேளாண் அலுவலர்களால் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சராசரி விளைச்சல் விவரங்கள் கணக்கிடப்பட்டு வறட்சி வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்ற பாதிப்புகள் ஏற்படும்போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிர்களுக்கு சேதம் ஏற்படும் விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையினரால் பயிர் அறுவடை பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு மேற்பார்வையிடப் படுகிறது. 2022-2023 ஆம் ஆண்டுக்கு சிறப்புப் பருவத்தில் 4 பயிர்களுக்கு 43842 பரிசோதனைகளும் மற்றும் ராபி பருவத்தில் 32 பயிர்களுக்கு

55932 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு சராசரி விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும் மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுவினால் ஒத்திசைவு செய்யப்பட்டு பரிந்துரை செய்யப்பட்ட பயிர் பரப்பு விவரங்கள் ஒவ்வொரு பருவ இறுதியிலும் காப்பீட்டு கழகங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. 2023-24ஆம் ஆண்டு வேளாண் துறையினரால் பயிர்கள் அறிவிக்கை செய்யப்பட்டு பயிர்களுக்கு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.2.6.7 தென்னை மற்றும் கமுகு பயிர் மதிப்பீட்டாய்வு




தென்னை மற்றும் கமுகு மரங்களின் எண்ணிக்கை கணிக்கப்படுதல், காய்க்கும் மற்றும் காய்க்காத மரங்களின்

எண்ணிக்கை, ஒரு தென்னை மற்றும் கமுகு மரத்தின் சராசரி உற்பத்தி விகிதம், மாநில/மாவட்ட அளவில் ஒரு ஆண்டிற்கான மொத்த உற்பத்தி ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னை மற்றும் கமுகு பயிரின் ஆய்வுக் காலம் ஜூலை முதல் ஜூன் வரை ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டு தென்னை பயிருக்கு 382 கிராமங்களிலும், கமுகு பயிருக்கு 99 கிராமங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.2.6.8 மழைப்புள்ளி விவரம்

மழைப் புள்ளி விவரங்கள் வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை, வனத்துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் இந்திய வானியல் ஆய்வுத் துறை போன்ற துறைகளால் பேணப்படும். 604 சாதாரண / தானியங்கி மழைமானி நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படுகிறது. இம்மழைப் புள்ளி விவரங்கள் மாதம், பருவம் மற்றும் ஆண்டு வாரியாக தொகுக்கப்பட்டு அறிக்கையாக பேணப்பட்டு வருகின்றன.

### 3.2.6.9 நீர்ப்பாசனம் மற்றும் நீர்த்தேக்க தரவுகள்

நீர்ப்பாசன தரவுகள் மூன்று தலைப்புகளின் கீழ் சேகரிக்கப்படுகிறது. அவை, ஆதார வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு, பயிர் வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு மற்றும்

நீர்த்தேக்கங்கள் மூலமாக பாசனத்திற்கு பயன்படும் பரப்பு போன்றவையாகும். இத்தரவுகள் வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆகிய துறைகளிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் நீர்ப்பாசனச் சிற்றேடுகள் தயாரிக்கப்படுகின்றன.

**3.2.6.10 விவசாயக்கூலி**

விவசாயக்கூலி விவரங்கள் மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் தலா ஒரு கிராமம் வீதம் தேர்வு செய்யப்பட்டு, விவரங்கள் சேகரிக்கப்படுகின்றது. அக்கிராமங்களில் விவசாயத் தொழில்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் கூலி விவரங்கள் களப் பணியாளர்களால் நேரடியாக சென்று சேகரிக்கப்பட்டு விவசாயக் கூலி குறியீட்டெண் கணிக்கப்பட்டு அறிக்கைகளாக ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. 2023-24–ஆம் ஆண்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**3.2.6.11 விற்பனை மிகுதித் திட்டம்**

விற்பனை மிகுதித் திட்டத்தின் நோக்கம் மூன்று பருவங்களின் (குறுவை, சம்பா மற்றும் கோடை) இறுதியில், நெல் உற்பத்திக்காக வழங்கப்பட்ட கூலிக்கான நெல்,

விதைக்க மற்றும் சொந்த நுகர்வுக்கான நெல் போன்றவைகள் தவிர்த்து, உற்பத்தியில் விற்பனைக்காக ஒதுக்கப்படும் நெல்லின் அளவு மதிப்பீடு செய்யப்படுகின்றது. இத்திட்டம் 2023-24-ஆம் ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.2.7 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்கள்

### 3.2.7.1 பயிர் பரப்பு விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம் (TRS)

ஒன்றிய அரசினால் செயல்படுத்தப்படும் இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் எதேச்சை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட 20 விழுக்காடு கிராமங்களில் நில பயன்பாட்டு புள்ளி விவரங்கள் பயிர் வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பயிர் பரப்பில், உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் பயிர் விவரங்கள், ஒன்பது முக்கிய பயிர்களுக்கு காரிப், ராபி மற்றும் கோடை ஆகிய மூன்று பருவங்களுக்கு சேகரிக்கப்படுகின்றன. கிராமப் பதிவேடுகள் சரிவர பேணப்பட கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வருவாய்த் துறை மூலம் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2022-23ஆம் ஆண்டு 3,480 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பயிர் பரப்பு விவரங்கள் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு, மாநில அளவிலான விவரங்களுடன் தொகுத்து ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

2023-24ஆம் ஆண்டு இத்திட்டம் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மாநிலத்தில் செயல்படுத்தப்படும்.

### 3.2.7.2 பயிர் மேம்பாட்டுத் திட்டம் (ICS)

பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் மாநில அளவில் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் மாதிரி சோதனையாக கிராம நிர்வாக அலுவலர்களால் பேணப்படும் பதிவேடுகளில் பயிர் பரப்பு மற்றும் அடங்கலில் கிராமத்திற்கான பக்கவாரியான பயிர் பரப்பின் கூட்டுத்தொகை சரியான முறையில் பராமரிக்கப்படுகிறதா என ஆராயவும், முக்கிய உணவு பயிர்களுக்கான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் ஆகும்.

இத்திட்டத்தின் நோக்கமானது, முதன்மை களப்பணியாளர்களாகிய கிராம நிர்வாக அலுவலர்களால் மாநில அளவில் சேகரிக்கப்படும் வேளாண் புள்ளி விவரங்களின் முறையில் காணப்படும் குறைபாடுகளை, ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு அலுவலர்களால் மேற்பார்வை மூலம் கண்டறிந்து அவற்றை களைய தக்க வழி வகைகளை இத்திட்டத்தின் மேம்பாட்டிற்காக பரிந்துரை செய்வதாகும்.

இத்திட்டத்தின் முடிவுகளை ஒன்றிய அரசின் தேசிய புள்ளிஇயல் அலுவலகம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடுகள் ஆகிய முதன்மைத் தரவுகளின் தரத்தை

மேம்படுத்த பயன்படுத்தப்படுகிறது. 2023-24ஆம் ஆண்டு இத்திட்டம் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் மாநிலத்தில் செயல்படுத்தப்படும்.

### 3.2.7.3 வேளாண்மைக் கணக்கெடுப்பு

வேளாண்மைக் கணக்கெடுப்பு 1970-1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மூன்று கட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

வேளாண்மைக் கணக்கெடுப்பின் முக்கிய காரணிகளான வேளாண் கைப்பற்றுகளின் வகைகள் (தனி, கூட்டு மற்றும் நிறுவனம்) குத்தகைத் தன்மை, நிலக்கைப்பற்றுதாரர்களின் சமூக நிலை, நிலப் பயன்பாடு, நீர்பாசன தன்மை, பயிரிடும் வகை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு மற்றும் வேளாண் கருவிகளின் பயன்பாடு போன்ற முக்கிய தகவல்களை அளிக்கின்றன.

இதுவரை, பத்து வேளாண்மைக் கணக்கெடுப்புகள் முடிவடைந்த நிலையில், 2021-22-ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு பதினொன்றாவது கணக்கெடுப்பின் முதற்கட்டப்பணி ஜூலை-2022–இல் தொடங்கப்பட்டுள்ளது. முதற்கட்ட களப்பணி மார்ச் – 2023 –இல் முடிவடையும்.

### 3.2.8 மாநில வருவாய் மதிப்பீடு

மாநில வருவாய் மதிப்பீடு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியினை அளவிடுவதற்கான காரணியாகும். மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் பிற தொடர்புடைய பொருளாதார பெருமொத்த காரணிகள், மாநிலத்தின் பொருளாதார நிலையை கணிக்க உதவும் ஒரு கருவியாக விளங்குகின்றன. மேலும், அரசுக்கு பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் ஏற்படும் மாற்றங்களை கணிக்கவும் அரசு நிதி நிலை தேவைகளை கணிக்கவும் இவை பயன்படுகின்றன.

3.2.8.1 **மாநில வருவாய்**

மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின் கீழ் மொத்த, நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன. மாநில வருவாய் மதிப்பீடுகள் 2011-12ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாட்டிற்கு 2019-20ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும், 2020-21ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடும், 2021-22ஆம் ஆண்டிற்கு முன்மதிப்பீடும் மற்றும் 2022-23ஆம் ஆண்டிற்கு தற்காலிக முன் மதிப்பீடு ஆகிய மதிப்பீடுகள் நடப்பு மற்றும்

நிலையான (2011-12) விலையில் கணிக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

**மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு – தமிழ்நாடு**

**(அடிப்படை ஆண்டு 2011-12)**

**(ரூபாய் கோடியில்)**

| வ. எண். | ஆண்டு | மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு | | | | நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நடப்பு விலையில் | வளர்ச்சி விகிதம் (%) | நிலையான (2011-12) விலையில் | வளர்ச்சி விகிதம் (%) | நடப்பு விலையில் | வளர்ச்சி விகிதம் (%) | நிலையான (2011-12) விலையில் | வளர்ச்சி விகிதம் (%) |
| 1 | 2011-12 | 751486 | - | 751486 | - | 674478 | - | 674478 | - |
| 2 | 2012-13 | 854825 | 13.75 | 791824 | 5.37 | 768295 | 13.91 | 709343 | 5.17 |
| 3 | 2013-14 | 968530 | 13.3 | 851976 | 7.6 | 858870 | 11.79 | 750416 | 5.79 |
| 4 | 2014-15 | 1072678 | 10.75 | 893915 | 4.92 | 957350 | 11.47 | 791915 | 5.53 |
| 5 | 2015-16 | 1176500 | 9.68 | 967562 | 8.24 | 1057084 | 10.42 | 862437 | 8.91 |
| 6 | 2016-17 | 1302639 | 10.72 | 1036762 | 7.15 | 1171973 | 10.87 | 922084 | 6.92 |
| 7 | 2017-18 | 1465051 | 12.47 | 1125793 | 8.59 | 1317984 | 12.46 | 1000308 | 8.48 |
| 8 | 2018-19 | 1630209 | 11.27 | 1204667 | 7.01 | 1468449 | 11.42 | 1071602 | 7.13 |
| 9 | 2019-20 (தி.ம) | 1743144 | 6.93 | 1243836 | 3.25 | 1564831 | 6.56 | 1099402 | 2.59 |
| 10 | 2020-21 (து.ம.) | 1808239 | 3.73 | 1245595 | 0.14 | 1617931 | 3.39 | 1094471 | -0.45 |
| 11 | 2021-22 (மு.ம.) | 2065436 | 14.22 | 1345108 | 7.99 | 1845519 | 14.07 | 1181923 | 7.99 |
| 12 | 2022-23 (த.மு.ம.) | 2349143 | 13.74 | 1453125 | 8.03 | 2097892 | 13.67 | 1277855 | 8.12 |

**தி.ம. - திருத்திய மதிப்பீடு ; து.ம - துரித மதிப்பீடு ; மு.ம.- முன் மதிப்பீடு**

**த.மு.ம.: தற்காலிக முன் மதிப்பீடு**

**தமிழ் நாட்டின் தனிநபர் வருமானம் (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி NSDP)**

**(ரூபாயில்)**

| வ. எண். | ஆண்டு | நடப்பு விலையில் | நிலையான (2011-12) விலையில் |
|---|---|---|---|
| 1 | 2011-12 | 93112 | 93112 |
| 2 | 2012-13 | 105340 | 97257 |
| 3 | 2013-14 | 116960 | 102191 |
| 4 | 2014-15 | 129494 | 107117 |
| 5 | 2015-16 | 142028 | 115875 |
| 6 | 2016-17 | 156595 | 123206 |
| 7 | 2017-18 | 175276 | 133029 |
| 8 | 2018-19 | 194373 | 141844 |
| 9 | 2019-20 (தி.ம.) | 206165 | 144845 |
| 10 | 2020-21 (து.ம) | 212174 | 143528 |
| 11 | 2021-22 (மு.ம.) | 241131 | 154427 |
| 12 | 2022-23 (த.மு.ம.) | 273288 | 166463 |

தி.ம.- திருத்திய மதிப்பீடு ; து.ம. - துரித மதிப்பீடு ;

மு.ம.- முன் மதிப்பீடு ; த.மு.ம.: தற்காலிக முன் மதிப்பீடு

மாவட்ட வருவாய் மதிப்பீடுகள் 2011-12 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2011-12 இல் இருந்து 2019-20 (தற்காலிகம்) வரை, நடப்பு மற்றும் நிலையான விலையில் மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது,

### 3.2.8.2 மாநில கணக்கு

மாநில கணக்கு பிரிவில் மத்திய புள்ளிஇயல் அலுவலக வழிகாட்டுதலின்படி பொருளாதார மற்றும் செயல் நோக்கம் அடிப்படையில் (Economic cum purpose Classification) தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டின் வரவு மற்றும் செலவு குறித்த நிதி நிலை அறிக்கைகள் 2020-21 (கணக்கு), 2021-22 (திருத்த மதிப்பீடு), 2022-23 (திட்ட மதிப்பீடு) தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மாநில வருவாய் மதிப்பீடு கணக்கிட பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டின் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றின் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு கணக்குகள் பொருளாதார மற்றும் செயல் நோக்கம் அடிப்படையில் பகுப்பாய்வு பணி நிறைவு செய்யப்பட்டு 2020-21 ஆம் ஆண்டிற்கு உரிய அட்டவணைகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், 2021-22 ஆம் ஆண்டிற்கு பகுப்பாய்வு பணி நடைபெற்று வருகிறது.

### 3.2.8.3 மூலதன ஆக்கம்

தமிழ்நாட்டின், மாநில/ஒன்றிய அரசு துறை சாரா வணிக நிறுவனங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் (பொதுத் துறை மற்றும் கல்வி நிறுவனங்கள்) ஆகியவற்றின் கணக்குகள் 2020-21 ஆம் ஆண்டிற்கு பகுப்பாய்வு பணி நிறைவு செய்யப்பட்டு, உரிய அட்டவணைகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், 2021-22 ஆம் ஆண்டிற்கு பகுப்பாய்வு பணி நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டிற்கான பொதுத்துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்க (GFCF) மதிப்பீடுகள் புதிய அடிப்படை ஆண்டை (2011-12), கொண்டு 2011-12 முதல் 2019-20 ஆண்டுகள் வரை கணிக்கப்பட்டு வருகிறது.

### 3.2.9 விலைவாசி மற்றும் விலைக் குறியீட்டெண்கள்

### 3.2.9.1 அங்காடி புலனாய்வு மற்றும் விலை புள்ளி விவரம்:

மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள் மூலம் முக்கிய வேளாண்மை மற்றும் வேளாண் சார்பற்ற பொருட்களின் விலைகள், முதன்மை வேளாண்மை பொருட்களின் வரத்து, இருப்பு மற்றும் அனுப்புகை ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. மாதாந்திர விலை விவர அறிக்கைகள் வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும்

மலைப்பயிர்கள் துறை, தேங்காய் மேம்பாட்டு வாரியம், இந்திய உணவுக் கழகம் ஆகிய துறைகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் சிறைத்துறை, அரசு பொது மருத்துவமனைகள் மற்றும் பிறதுறைகளிலிருந்து விலை விவரங்கள் கோரப்படும்போது அவ்விவரங்கள் அளிக்கப்படுகிறது.

### 3.2.9.2 மொத்த விலை குறியீட்டெண்

தமிழ்நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் 2011-12-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஒவ்வொரு மாதமும் கணித்து வெளியிடப்படுகிறது. சில்லறை விலை விவரங்களில் ஏற்படும் மாற்றங்களை முன்கூட்டியே கணிப்பதற்கு மொத்த விலைக் குறியீட்டெண் பயன்படுகிறது. வேளாண்மை மற்றும் வேளாண்மை தொழில் சாராத பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் 83 மையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு, தமிழ்நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் கணிக்கப்படுகிறது.

### 3.2.9.3 தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்

தமிழ்நாட்டில் உள்ள சென்னை, சேலம், மதுரை, குன்னூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய 7 மத்திய மையங்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் சிம்லாவில் உள்ள மத்திய தொழிலாளர் செயலகத்தால் 2016 = 100 - ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு கணித்து வெளியிடப்படுகிறது. அதற்கான விலை விவரங்கள் அந்தந்த மையங்களிலிருந்து 14 அங்காடிகளில் விலை சேகரித்து நேரடியாக சிம்லாவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கடலூர், நாகர்கோயில், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 4 மாநில மையங்களுக்கு 2011 =100-ஐ அடிப்படை ஆண்டாக கொண்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் மாதந்தோறும் கணித்து வெளியிடப்படுகிறது. இந்த குறியீட்டெண்ணைக் கொண்டு அகவிலைப்படி, தினக்கூலி மற்றும் குறைந்தபட்ச கூலி ஆகியவை கணக்கிடப்படுகின்றன.

**3.2.9.4 மாவட்ட அளவிலான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் (கிராமப்புறம், நகர்ப்புறம், இணைந்தது)**

தமிழ்நாட்டில் மாவட்டங்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண் (கிராமப்புறம், நகர்புறம், இணைந்தது) அக்டோபர் 2022 முதல் மாதந்தோறும் 2019-2020=100 ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு கணித்து வெளியிடப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள 153 கிராமப்புற அங்காடிகள் மற்றும் 190 நகர்ப்புற அங்காடிகளிலிருந்து விலை விவரங்கள் சேகரிக்கப்பட்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்கப்படுகிறது. திட்டங்களை பரவலாக்குவதற்கும் மாவட்ட அளவிலான விலை நிலவரப் போக்கினை அறிந்து கொள்வதற்கும் (கிராமப்புறம் நகர்புறம் இணைந்தது) நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் பயன்படுகிறது.

**3.2.10 ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு**

பொருளாதாரக் கணக்கெடுப்பானது மாநிலத்தின் புவியியல் எல்லைக்குள் அமைந்திருக்கும் அனைத்து நிறுவனங்களின் (பயிர் உற்பத்தி, மலைத் தோட்டப்பயிர், பொது நிர்வாகம், இராணுவம், கட்டாய சமூகப் பாதுகாப்பு ஆகியவை தவிர) எண்ணிக்கையினை வழங்குகிறது, இது நிறுவனங்களின் புதுப்பிக்கப்பட்ட சட்டகத்தை உருவாக்கும்

நோக்கில் நடத்தப்படுகிறது. பொருளதார செயல்பாடு, உரிமையாளர் வகை, முக்கிய நிதி ஆதாரம், வேலை வாய்ப்பு, பதிவு விவரங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களின் பண்புகள் பொருளாதாரக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படுகின்றன. இது குறிப்பாக அமைப்புச் சாரா துறையில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை, தொழில் முனைவோர் குறித்த அடிப்படை விவரம் மற்றும் பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளின் வேலைவாய்ப்பு நிலை போன்ற தரவுகளை வழங்குகிறது. பொருளாதாரக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு மிகவும் பயன்படுகின்றன.

பொருளாதாரக் கணக்கெடுப்பானது இந்திய அரசின் திட்டமாகும், இந்திய அரசின் 100 சதவீத நிதி உதவியுடன் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. இதுவரை ஆறு பொருளாதாரக் கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இந்திய அரசினால் இதுவரை நடத்தப்பட்டுள்ள அனைத்து பொருளாதாரக் கணக்கெடுப்புகளிலும் தமிழ்நாடு பங்கு பெற்றுள்ளது. தற்போது நடைபெறுவது ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பாகும்.

- இந்திய அரசின் புள்ளிஇயல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தினால் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. Common Service Centre (CSC) e-Governance Services India Limited, a Special Purpose Vehicle (CSC-SPV) என்ற நிறுவனம் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பை செயல்படுத்தும் நிறுவனமாகும் மற்றும் தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைக்கும் துறையாக பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை உள்ளது.
- கணக்கெடுப்பு பணி மற்றும் முதல் நிலை மேற்பார்வை பணி (100% மேற்பார்வை) Common Service Centre, e-Governance Services India Limited நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு பணியில் 10%, இரண்டாம் நிலை மேற்பார்வையாளர்களால் மேற்பார்வையிடப்பட்டது. இரண்டாம் நிலை மேற்பார்வை பணியில் தேசிய மாதிரி ஆய்வு அலுவலக அலுவலர்கள் மற்றும் மாநில பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் தொழில் மற்றும் வர்த்தக துறையைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.
- ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பின், நிகழ் நேர தரவு சரிபார்ப்பு (real-time data validation)

பணிகள் அதிநவீன தகவல் தொடர்பு தொழில் நுட்ப (ICT) முறைகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு பணி தமிழ்நாட்டில் சுமூகமாக நடைபெற, மாநில ஒருங்கிணைப்புக் குழு (SLCC), மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு (DLCC) – (சென்னை நீங்கலாக) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைப்புக் குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாட்டில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு களப்பணி 2019-ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, களப்பணி நிறைவடைந்து தற்காலிக முடிவு விவரங்களை சரிபார்க்கும் பணி, இந்திய அரசின் புள்ளிஇயல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.2.11 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

#### 3.2.11.1 குறிகாட்டிகளின் வரையறை

நீடித்த வளர்ச்சி இலக்குகள் அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை அடைவதற்கான ஆதார செயல் திட்டமாகும். இந்நீடித்த வளர்ச்சி இலக்குகள் மக்கள் சந்திக்கும் வறுமை, சமத்துவமின்மை, காலநிலை, சுற்றுச்சூழல்

சீரழிவு, செழிப்பு, அமைதி மற்றும் நீதி ஆகியவை தொடர்பான உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள உதவுகின்றன.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை கண்காணிப்பதற்கு குறிகாட்டிகள் முதுகெலும்பாகத் திகழ்கின்றன.

மாநில குறிகாட்டி வரையறை 314 குறிகாட்டிகளையும், மாவட்டக் குறிகாட்டி வரையறை 104 குறிகாட்டிகளையும் மற்றும் வட்டாரக் குறிகாட்டி வரையறை 93 குறிகாட்டிகளையும் கொண்டுள்ளது.

இம்மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்குதலின் ஒரு பகுதியாக, 60 நகர்ப்புற மற்றும் 32 மீள்குடியேற்றப் பகுதிகள் மேம்பாட்டிற்கான குறிகாட்டிகளின் வரையறைகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

### 3.2.11.2 நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கண்காணிப்பு பலகை (SDG Dashboard)

சம்பந்தப்பட்ட தொடர்புத் துறைகள் (Line Department) தங்களுடைய குறிகாட்டிகளின் புள்ளி விவரங்களை இணைய வழி மூலம் கண்காணிப்பு பலகையில் உள்ளீடு செய்ய ஏதுவாக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA)யால் உருவாக்கப்பட்ட கண்காணிப்பு பலகையானது இத்துறையின் மையக் குழு பங்களிப்புடன் மறுசீரமைப்பு

செய்யப்பட்டு ஜனவரி 2021 முதல் பயன்பாட்டில் உள்ளது. மாவட்டக் குறிகாட்டிகள் மற்றும் வட்டார குறிகாட்டிகளின் புள்ளி விவரங்களை நிகழ்நிலைப் பதிவேற்றம் (Online Uploading) செய்வதற்கு மறுசீரமைப்பு செய்யப்பட்ட கண்காணிப்பு பலகையில் வகை செய்யப்பட்டுள்ளது. இப்பலகையில் இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறிகாட்டிகளின் செயல்திறனைக் காட்சிப்படுத்துவதற்கான கருவிகள் (Visualization Tools) உள்ளன.

**3.2.11.3 திறன் மேம்பாடு**

கண்காணிப்பு பலகையில் குறிகாட்டிகளின் புள்ளி விவரங்களை உள்ளீடு செய்வதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி வகுப்புகள் தொடர்பு அலுவலர்கள், தொடர்புத் துறைகளின் தகவல் அமைப்பு மேலாண்மை அலுவலர்கள் (ம) இத்துறையின் மாவட்ட அலுவலர்களுக்கு நடத்தப்பட்டது.

**3.2.11.4 கண்காணித்தல்**

இத்துறை ஆண்டுதோறும் நித்தி ஆயோக் வெளியிடும் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இந்திய குறியீட்டு அறிக்கையைப் பயன்படுத்தி பல்வேறு இலக்குகளின் செயல்திறனை பகுப்பாய்வு செய்வதோடு மட்டுமின்றி அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய பகுதிகளை கண்டறிந்து

தொடர்புடைய துறைகளுக்கு அவற்றினை தெரிவித்து மாநிலத்தின் முன்னேத்திற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வழிவகை செய்கிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின்கீழ், தொடர்புத் துறைகளுடன் ஒருங்கிணைந்து தரவுகள் சேகரிக்கும் பணியில் இத்துறையின் பங்களிப்பு முதன்மையானது.

தமிழ்நாட்டின் 2021 ஆம் ஆண்டிற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தரவுத் தாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2023 அன்று வெளியிடப்பட்டது. இந்த தரவு தாள் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் உள்ள பல்வேறு குறிகாட்டிகளின் கீழ் இம்மாநிலத்தின் வளர்ச்சியை முன்வைக்கிறது.

குறிக்கோள்களை அடைவதில் உரிய தொடர்பு துறைகள் வகுத்துள்ள செயல்பாடுகளை உள்ளடக்கிய பற்பரிமாண வறுமைக் குறியீட்டெண் (Multidimentional Poverty Index) குறியீடுகளை கொண்டு மாநில சீர்திருத்த செயல் திட்டத்தினை (State Reform Action Plan) இத்துறை தயாரித்துள்ளது. இந்திய அரசின் நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைகள் தீர்க்கும் துறையின் நல்லாட்சிக் குறியீடு-2021-இன் அடிப்படையில் தமிழ் நாட்டின் 2021ஆம் ஆண்டிற்கான மாவட்ட நல்லாட்சி

குறியீடு வடிவமைக்கும் பணியினை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

### 3.2.12 வெளியீடுகள்

இத்துறையிலிருந்து மாநில, மாவட்ட, வட்டார அளவில் ஏறத்தாழ 500 அறிக்கைகள் பருவ வாரியாக வெளியாகின்றன. மேலும், பருவமும், பயிரும் அறிக்கை, மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள், பொருளாதார மற்றும் செயல்நோக்கம் அடிப்படையிலான தமிழ்நாடு நிதிநிலை அறிக்கைளை வெளியிடுகின்றன.

மேலும் "தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு", "தமிழ்நாடு ஒரு கண்ணோட்டம்", "மாவட்ட புள்ளிஇயல் கையேடு", "வட்டார புள்ளிஇயல் கையேடு" ஆகிய முக்கிய வெளியீடுகள் ஆண்டு தோறும் வெளியிடப்படுகின்றன.

"தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு 2020-21", "மாவட்ட புள்ளிஇயல் கையேடு 2021-22", "வட்டார புள்ளிஇயல் கையேடு 2021-22" மற்றும் "தமிழ்நாடு ஒரு கண்ணோட்டம் 2021-22" வெளியிடப்பட்டது.

### 3.2.13 சிறுபாசன புள்ளி விவர பகுத்தாய்வு (RMIS)

சிறுபாசன புள்ளி விவர பகுத்தாய்வுத் திட்டமானது நூறு சதவீத மத்திய அரசு நிதியுதவியுடன், ஜலசக்தி அமைச்சகத்தின் நீர் வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்புத் துறையின் கீழ் சிறுபாசனத் திட்டங்கள் குறித்த விரிவான புள்ளி விவரத் தொகுப்பினை உருவாக்கும் பொருட்டு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அனைத்து மாநிலங்களிலும யூனியன் பிரதேசங்களிலும் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் முக்கிய நோக்கமானது, சிறுபாசன கணக்கெடுப்பினை நடத்தி, அதன் மூலம் தெளிவான தரவுகளைத் தொகுத்து அளிப்பதோடு, நிலத்தடி நீர் குறித்து ஆய்வு செய்தும், அவை கிடைக்கப் பெறும் தன்மையை மதிப்பீடு செய்தும், நீர் வள மேம்பாடு குறித்தத் திட்டமிடுதலுக்கு உதவியாக இருப்பதாகும்.

#### 3.2.13.1 ஆறாவது சிறுபாசன கணக்கெடுப்பு (2017-18) மற்றும் முதலாம் நீர் நிலை கணக்கெடுப்பு

1986-87 ஆம் ஆண்டினை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு தொடங்கி இதுவரை ஐந்து சிறுபாசன கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக

2017-18 ஆம் ஆண்டை மேற்கோள் ஆண்டாகக் கொண்டு ஆறாவது சிறுபாசனக் கணக்கெடுப்பு பணி நடைப்பெற்றது.

ஒன்றிய அரசு, சிறுபாசனக் கணக்கெடுப்பின் நோக்கத்தினை மேலும் விரிவுபடுத்தி நீர் நிலைகள் குறித்த கணக்கெடுப்பும் சேர்த்து நடத்த தீர்மானித்தது. இதன் நோக்கமானது, நீர் நிலைகள் குறித்த முக்கிய விவரங்களாகிய, நீர் நிலைகளின் எண்ணிக்கை, அளவு, அவற்றின் நிலை, வகை, பயன்பாடு, நீரைத் தேக்கி வைக்கும் திறன் போன்ற விவரங்களை சேகரிப்பதே ஆகும். இந்த கணக்கெடுப்பில், அனைத்து நீர் நிலைகளும், அவை எவ்வித உபயோகமாக இருந்தாலும் கணக்கெடுக்கப்படுகின்றன. இத்தகைய தெளிவான, விரிவான புள்ளி இயல் தரவுகள், நீர் நிலைகள் குறித்த திட்டமிடலுக்கும், கொள்கை வகுத்தலுக்கும் பயனுள்ளதாக இருக்கும். நீர் நிலைகளின் புகைப்படங்கள் மற்றும் அட்ச ரேகை தீர்க்க ரேகை, விவரங்கள் பிரத்யேக கைபேசிச் செயலி மூலம் எடுக்கப்பட்டு அவை மத்திய அரசின் வலைசேவையகத்தில் (Web Server) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஆறாவது சிறுபாசன கணக்கெடுப்பு 2017-18 ல், முதன் முதலாக நீர்நிலைக் கணக்கெடுப்பும் நடத்தப்பட்டு தற்போது அட்டவணை இறுதியாக்குதல் மற்றும் இறுதி அறிக்கை

தயாரித்தல் எனும் முடிவுறும் தருவாயில் உள்ளது. அரசாணை (2ப) எண்.143, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [LA-I(2)] துறை, நாள்: 04.04.2022 -ன் படி இப்பிரிவானது நில நிர்வாக ஆணையரின் கட்டுபாட்டின் கீழ் இருந்து ஏப்ரல் 2022 முதல் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை ஆணையரின் கட்டுபாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

### 3.2.14 தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிலையம்

தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிலையம், 2012ஆம் ஆண்டில் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் பணிபுரியும் அலுவலர்கள் செயல்திறனை மேம்படுத்தவும், புள்ளிஇயல் அறிவை வளப்படுத்துவதற்கு புள்ளிஇயல் பயிற்சி வழங்குவதற்காக நிறுவப்பட்டது. இந்த நிலையம் 01.05.2012 முதல் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை வளாகத்தில் இயக்குநர் மற்றும் துணை பணியாளர்களுடன் செயல்பட்டுவருகிறது.

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் பல்வேறு பணியாளர்களுக்கான பயிற்சி தேவைகளை மதிப்பிடுவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் பணிபுரியும் பல்வேறு புள்ளிஇயல் பணியாளர்களுக்கு 30 பயிற்சித் திட்டங்களை குழு பரிந்துரைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் தமிழ்நாடு மாநில

புள்ளிஇயல் பயிற்சி நிலையத்தில் உள்ள உள்கட்டமைப்புகளின் அடிப்படையில், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் மொத்த பயிற்சித் தேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மதிப்பீட்டின்படி, புதிதாக பணியமர்த்தப்பட்ட புள்ளிஇயல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் புள்ளிஇயல் உதவி இயக்குநர்களுக்கான அறிமுக பயிற்சித் திட்டங்களைத் தவிர 145 அணிகளில் 5029 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கீழ்கண்ட விரிவான பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- பொருளியல், புள்ளியியல் மற்றும் மக்கள் தொகையியல் ஆய்வு பற்றிய அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் மேம்பட்ட புள்ளிஇயல் முறைகள்.
- துறை சார் திட்டங்கள்
- தகவல் தொழில்நுட்ப வழிமுறைகள்.
- நிர்வாகம் மற்றும் நிதி தொடர்பான அலுவலக நடைமுறைகள்.
- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் தரவு பகுப்பாய்வு குறித்த சிறப்புப் பயிற்சி

- பெண்களுக்கு அதிகாரமளித்தல், தகவல் அறியும் உரிமை சட்டம் போன்ற பொதுவான தலைப்புகள்.

2022-23ஆம் ஆண்டில், 746 அலுவலர்களுக்கு, 21 அணிகளில், 18 பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 2023-24-ஆம் ஆண்டில், 1291 பயிற்சியாளர்களுக்கு, 35 அணிகளில், 10 பயிற்சி திட்டங்கள், பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை 1974-ம் ஆண்டு முதல் செயல்பட தொடங்கி அதன் பணியாக, மக்களின் கருத்து மற்றும் தரவு அடிப்படையிலும் திட்டத்தை செயல்படுத்தும் துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்தும் திட்டங்களின் விளைவுகள் மற்றும் தாக்கம் குறித்து மதிப்பீடு செய்து அரசுக்கு தெரிவித்து வருகிறது. மதிப்பீட்டு அறிக்கைகள், அரசு கொள்கை முடிவு எடுத்தல், கொள்கை உருவாக்கம் மற்றும் திட்ட மேம்பாட்டிற்கான திருத்தம் மேற்கொள்ள உதவுகிறது. இத்துறை சமூக நலன், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, நீர்ப்பாசனம், தோட்டக்கலை, வனம், வீட்டுவசதி, போக்குவரத்து, ஊரக வளர்ச்சி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் போன்ற பல்வேறு துறைகளில் இதுவரை 797 மதிப்பீட்டாய்வு அறிக்கைகள் முடிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

**3.3.1 துறையின் முக்கியப் பணிகள்**

i) ஒன்றிய, மாநில அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

ii) 'தமிழ்நாடு – பொருளாதார ஆய்வறிக்கை' வருடாந்திர ஆவணத்தை தயாரித்து வெளியிடுதல்.

**3.3.2 துறையின் நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு**

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையானது மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் நிர்வாகத் தலைமையாகவும் மற்றும் துறையின் செயல்பாட்டை நிர்வகிப்பது, வழிநடத்துவது, ஊக்குவிப்பது மற்றும் மேம்படுத்துவது போன்ற பணிகளை செய்கின்றது. இத்துறையின் செயல்பாடுகள் மாநில மதிப்பீட்டுக் குழு (SEC) மற்றும் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB) போன்ற மாநில அளவிலான அமைப்புகள் மூலம் மேற்பார்வையிடப்படுகின்றன.

**3.3.2.1 மாநில மதிப்பீட்டுக் குழு (SEC)**

அரசு கூடுதல் தலைமை செயலாளர், நிதித் துறை, மாநில மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக செயல்படுகிறார்.

இக்குழு ஆய்வுக்கான மதிப்பீட்டு ஆய்வுகளின் பட்டியலை தெரிவு செய்கின்றது.

### 3.3.2.2 மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB)

மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவானது (SEAB) மாநில திட்டக் குழுவின் துணை தலைவரை தலைமையாகக் கொண்டு செயல்படுகிறது. இக்குழுவில் பல்வேறு கல்வி ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மாநில மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டு இத்துறையில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு ஆய்வுகளின் செயல்முறையியல்கள் மற்றும் ஆய்வின் நோக்கங்கள் மற்றும் மாதிரி வரைவு குறித்து கலந்து ஆலோசித்து விவாதித்து முடிவு செய்கிறது. மேலும் இறுதி முடிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாய்வின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை விவாதித்து இறுதி செய்கிறது. இக்குழு, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையினால் கூட்டத்தின் முன் வைக்கப்படும் செயல்முறையியல்கள் மற்றும் ஆய்வு அறிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கிறது. 2022ஆம் ஆண்டில் இக்குழு ஏழு மதிப்பீட்டு ஆய்வறிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

### 3.3.3 செயல்திறன்

தற்பொழுது, 28 மதிப்பீட்டு ஆய்வுகள் ஆய்விற்காக உள்ளன. அவற்றில் 5 மதிப்பீட்டு ஆய்வுகள் வரைவு அறிக்கை நிலையிலும், 2 ஆய்வுகள் சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு மற்றும் அட்டவணைப்படுத்தும் செயல்பாட்டிலும், 3 ஆய்வுகள் களப்பணி நிலையிலும், 1 ஆய்வு வினாத்தாள் தயாரிப்பு மற்றும் இறுதி செய்யும் பணியிலும் உள்ளன. 3 ஆய்வுகள் வெளிநிறுவனங்கள் மூலம் மதிப்பீட்டு ஆய்வு செய்யப்படுகிறது. 4 ஆய்வுக்கான செயல்முறையியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 3 ஆய்வுகள் மாநில மதிப்பீட்டுக் குழுவில் வைத்து கைவிட முன்மொழியப்பட உள்ளன மற்றும் 7 ஆய்வுகளுக்கான அடிப்படை விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

### 3.3.4 மதிப்பீட்டு ஆய்வு முறை

மாநில மதிப்பீட்டுக் குழு இத்துறையிடம் மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளும் பணியினை ஒப்படைத்துள்ளது. இப்பணியில் அடிப்படை விவரங்கள் மற்றும் ஆய்வுக்கான தேவை ஆகியவை திட்டத்தை செயல்படுத்தும் துறையிலிருந்து சேகரிக்கப்பட்டு மாதிரி வடிவமைப்புடன் கூடிய செயல்முறையியல்கள் வடிவமைக்கப்படுகின்றன. மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில்

இச்செயல்முறையியல்கள் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டு, ஒப்புதல் பெற்ற பின்பு ஆய்வின் நோக்கங்களின் அடிப்படையில் கேள்வித்தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. கேள்வித்தாள் மென்பொருள் பயன்பாட்டில் பதிவேற்றப்பட்டு, ஓட்டம் மற்றும் சரியான தன்மையை சரிபார்க்க மாதிரி களப்பணியின்போது கேள்வித்தாள் சோதனை செய்யப்படுகிறது. மேலும், முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளை சேகரிக்க தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் களப்பணிகள் நடத்தப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டு மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்டு வரைவு அறிக்கைத் தயாரிக்கப்பட்டு, கருத்துகேட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படுகிறது. இறுதி செய்யப்பட்ட ஆய்வு வரைவு ஆய்வறிக்கை ஒப்புதலுக்காக மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் வைக்கப்படுகிறது.

### 3.3.5 மின்னணு மதிப்பீட்டு ஆய்வு முறை

மின்னணு மதிப்பீட்டு ஆய்வு முறையின் ஓர் செயல்பாடாக இத்துறைக்கான வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தரமான தரவு சேகரிப்பு மற்றும் தரவு சேகரிப்பு செயல்திறனை மேம்படுத்த, வினாத்தாள் வடிவமைக்க மற்றும் வரைப்பட்டிகைகளில் வினாக்களை பதிவேற்ற மென்பொருள் பயன்பாட்டில் துறை

பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்துறை மூலம் 2020 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை களப்பணியில் அனைத்து முதல்நிலை விவரங்களும் வரைப்பட்டிகைகளை பயன்படுத்தி சேகரிக்கப்பட்டு 22 மதிப்பீட்டு ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன.

### 3.3.6 மதிப்பீடு ஆய்வுக்கான வழிகாட்டி முறை

கொள்கை முடிவெடுப்பதில் மதிப்பீட்டின் பங்கை வலுப்படுத்தவும் செயல்பாட்டில் உள்ள திட்டங்களை ஆய்வு செய்யவும் மற்றும் திட்டத்தை விரிவாக்கம் செய்யவும் அல்லது நீக்கம் செய்யவும், பல்வேறு அரசு துறைகளால் மதிப்பீட்டு ஆய்வுகளை வடிவமைக்கவும், புரிந்துகொள்ளவும் மற்றும் செயல்படுத்துவதற்கான பொதுவான மதிப்பீட்டாய்வு வழிகாட்டுதல் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

26.07.2021 அன்று நடைபெற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில், ஆண்டுக்கு ரூ.150.00 கோடிக்கு மேல் நிதியுதவி பெற்றுள்ள அனைத்து அரசு நிதியுதவி திட்டங்களுக்கான தாக்க மதிப்பீட்டு ஆய்வினை மேற்கொள்ள இந்தத் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மதிப்பீட்டு வழிகாட்டுதலின்படி எந்த விதமான தாமதமும் இன்றி மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு திட்ட நிதியில்

2 சதவீத கட்டாயக் கட்டணத்தைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் 14.12.2021 அன்று நடைபெற்ற அரசு தலைமைச் செயலாளரின் ஆய்வுக் கூட்டத்தில், ரூ.150 கோடிக்கு மேல் செலவாகும் திட்டங்களுக்காக மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ள வெளி மதிப்பீட்டாய்வு நிறுவனங்களை அமர்த்திக் கொள்ள பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன்படி ரூபாய் 150 கோடி மற்றும் அதற்கு மேல் செலவாகும் மாநில திட்டங்களுக்கான மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு செலவு மதிப்பீட்டுத் தொகை மற்றும் காலக்கெடு பிற துறைகளிலிருந்து பெறப்பட்டு அரசால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

### 3.3.7 வெளி நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படும் மதிப்பீட்டு ஆய்வுகள்

வெளிநிறுவன மதிப்பீட்டாய்வு மேற்கொள்வதற்கான வெளி நிறுவனங்களின் பட்டியலில் உள்ள மதிப்பீட்டு ஆய்வு நிறுவனங்களை தேர்ந்தெடுக்கும் பணி நிறைவடைந்துள்ளது. மூன்று ஆய்வுகளின் கோரிக்கைக்கான வேண்டுகோள் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பரிசீலனைக்குப்பின் ஆய்வு மேற்கொள்ள ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

### 3.4 சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வந்த மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP) மத்திய அரசின் உதவியிலிருந்து விலக்கப்பட்டதன் விளைவாக, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP) தமிழ்நாட்டில் 2015-16 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, ரூ.75.00 கோடி ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இன்றுவரை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் பணிகள் கீழ்கண்ட 11 மாவட்டங்களில் அரசின் ஒப்புதலின் அடிப்படையில், திட்ட இயக்குநர், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், உதகமண்டலம் அவர்களின் மேற்பார்வையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. நீலகிரி
2. கோயம்புத்தூர்,
3. திருப்பூர்,
4. ஈரோடு
5. திண்டுக்கல்
6. கன்னியாகுமரி
7. மதுரை
8. தேனி

9. திருநெல்வேலி
10. விருதுநகர்
11. தென்காசி

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியின் கடல் மட்டத்திலிருந்து 600 மீட்டருக்கு மேல் உள்ள மலைப் பகுதிகளில் மட்டுமே சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்ட பணிகள் வரையறுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, மண், ஈரப்பதம் மற்றும் காடுகளை பாதுகாத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த பணிகள்/திட்டங்களை செயல்படுத்துவதே ஆகும். மேலும் இத்திட்டத்தின் நோக்கமானது, சுற்றுச்சூழல் பூர்வீக தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பாதுகாப்பதற்கும், நுண் நீர்ப்பிடிப்புப் பகுதி அளவில் மலைவாழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் சிறப்பு முக்கியத்துவம் அளித்து, மனித வாழ்வாதார மேம்பாட்டுடன் நீர் மற்றும் நில மேம்பாட்டு நடவடிக்கைகளின் பிணைப்பை ஏற்படுத்துவதாகும்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் மட்டுமின்றி, தோட்டக்கலை, பழங்குடியினர் நலன், கால்நடை வளர்ப்பு, நெடுஞ்சாலைகள் மற்றும் கிராமப்புற சாலைகள் அமைத்தல், நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்புகளில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் வகையில்

பணிகளை மேற்கொள்ளுதல், வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் வேளாண் வணிகம், மீன்வளர்ப்பு மேம்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய பணிகளுக்கும் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் போதுமான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் நிர்வாகத் துறைகளால் பரிந்துரைக்கப்பட்டு, இறுதியாக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையிலான திட்ட அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழுவால் (PSMC) அங்கீகரிக்கப்படுகின்றன.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகளை விரைவாக கண்காணிக்கும் பொருட்டு இணைய தளத்தில் செயல்படும் வகையில் வலை கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூ.75.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுநாள் வரையில் 2841 திட்டப் பணிகளுக்கு மார்ச் 2023 வரை ரூ.497.864 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளில் இன்று வரை ரூ.465.296 கோடி செலவில் 2430 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளது.

## 4.0 சிறப்பு முயற்சிகள் துறை

2003 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள் துறை, பல்வேறு தரப்புகளில் உருவாகும் புத்தாக்கத் திட்டங்களை, தலைமைச் செயலகத்திலுள்ள சம்பந்தப்பட்ட நிர்வாக துறைகள் மற்றும் அவற்றின் தொடர்புடைய துறைகளைக் கலந்தாலோசித்து செயல்படுத்தி வருகிறது. அவ்வாறாக, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் பெயர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை என்று மாற்றம் செய்யப்பட்டது. இத்துறை தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டம் முதன்மையான சிறப்பு முயற்சி திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## சென்னை பெருநகர் பகுதியில் பொதுப் போக்குவரத்து அமைப்பு

சென்னை பெருநகர்ப் பகுதி, சென்னை மெட்ரோ இரயில் (கட்டம்-I), மாநகர போக்குவரத்து கழகப் பேருந்துகள், புறநகர் இரயில் அமைப்பு மற்றும் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பு உள்ளிட்ட விரிவான பொதுப் போக்குவரத்து கட்டமைப்பைக் கொண்டதாகும். தற்போதுள்ள பொதுப் போக்குவரத்து அமைப்பு, பெருகிவரும் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யவும் மற்றும் போக்குவரத்து நெரிசல்

மற்றும் மாசினைக் குறைப்பதற்கும் போதாது எனக் கருதப்படுகிறது. மேலும் பொதுப் போக்குவரத்தின் பங்கினை 28 சதவீதத்திலிருந்து (2018) 50 சதவீதமாக 2048 இல் உயர்த்த அரசு கடமைப்பட்டுள்ளது. எனவே தமிழ்நாடு அரசு, 118.9 கி.மீ மெட்ரோ இரயில் கட்டமைப்புடன் கூடிய சென்னை மெட்ரோ இரயிலின் கட்டம்-II ஐ செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

## 1. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிறுவனங்கள் சட்டத்தின்படி, (Companies Act) மாநில அரசிற்கு சொந்தமான சிறப்பு வகை நிறுவனமாக, டிசம்பர் 2007இல் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு 50:50 என்ற சமபங்கு வீதத்தில் இந்நிறுவனம் கூட்டு முயற்சி நிறுவனமாக 2009ல் மாற்றியமைக்கப்பட்டது. இதன்படி, ஒன்றிய அரசு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் அரசு செயலாளரை, தலைவராக கொண்டு ஐந்து இயக்குநர்களை நியமனம் செய்கிறது. அதே போன்று, மாநில அரசு மேலாண்மை இயக்குநர் உட்பட ஐந்து இயக்குநர்களை நியமிக்கிறது.

## 2. சென்னை மெட்ரோ இரயில் திட்டங்கள்

சென்னை மெட்ரோ இரயில் திட்டமானது, விமான போக்குவரத்து, தொலைதூர இரயில்கள் மற்றும் பேருந்துகள், மாநகரப் பேருந்துகள், புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய பொது மற்றும் தனியார் போக்குவரத்து அமைப்புகளுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட விரைவான, நம்பத்தகுந்த, திறன்மிக்க, மாசற்ற மற்றும் நீடித்த பொதுப் போக்குவரத்தாகும். சென்னை மெட்ரோ இரயில் திட்டம் வாழ்க்கையில் வசதிகள் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதோடல்லாமல் நகரத்தின் மாசினையும் குறைக்கின்றது. சென்னையின் மெட்ரோ இரயில் கட்டமைப்பிற்கு மிக அதிக முதலீடுகள் தேவைப்படுவதால் சில கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.1 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்- கட்டம்-I (நீட்டிப்புடன் சேர்த்து)

வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையிலான ஒரு வழித்தடமும், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையிலான மற்றொரு வழித்தடமும் என இரண்டு வழித்தடங்களைக் கொண்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-I,

2006 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டது. மாநில அரசு, இத்திட்டத்திற்கு 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கி, ஒன்றிய அரசின் நிதியுதவியும் வெளிநாட்டு நிதியுதவியும் பெறுவதற்காக பரிந்துரைத்தது. ஒன்றிய அரசு, 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், கட்டம்-Iன் கீழ், இரண்டு வழித்தடங்களை செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை வழங்கியது. 45.1 கி.மீ நீளத்திலான இத்திட்டம் ரூ.14,600 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசும் மற்றும் ஒன்றிய அரசும் இணைந்து கூட்டு முயற்சி அடிப்படையில் செயல்படுத்தும் வகையில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் – I இன் வழித்தடம் - 1 ஐ வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையில் 9.051 கி.மீ நீளத்திற்கு நீட்டிப்பதற்கு ஒப்புதல் அளித்தது. இத்திட்டக் கருத்துரு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காகவும் அதன் நிதியுதவிக்காகவும் மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவி பெறுவதற்காகவும் 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒன்றிய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டத்தை ரூ.3770 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 15-06-2016 அன்று ஒன்றிய அரசு வழங்கியது.

கட்டம்-Iன் (நீட்டிப்பு உட்பட) கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட மெட்ரோ இரயில் வழித்தடங்களின் விவரங்கள் வருமாறு:

| **வழித்தடங்கள்** | **உயர்த்தப் பட்டவை** | **சுரங்கப் பாதை** | **மொத்தம்** |
|---|---|---|---|
| சென்னை விமான நிலையம் முதல் விம்கோ நகர் வரையில் (கி.மீ) | 11.2 | 20.9 | 32.1 |
| சென்னை சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரையில் (கி.மீ) | 12.3 | 9.7 | 22.0 |
| **மொத்த நீளம் (கி.மீ)** | **23.5** | **30.6** | **54.1** |
| **மெட்ரோ இரயில் நிலையங்கள்** | **15** | **26** | **41** |

கட்டம்-I ன் கீழ் பயணிகள் சேவைகள், பல்வேறு நிலைகளில் பணிகள் முடிவுற்றதையும் பணிமனைக்கு இணைப்பு ஏற்படுவதன் அடிப்படையிலும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொடங்கி வைக்கப்பட்டன:

| தொடங்கி வைக்கப்பட்ட நாள் | கி.மீ | வழித்தடப்பகுதி |
|---|---|---|
| 29.06.2015 | 10.15 | கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையில் (உயர்த்தப்பட்டவை) |
| 21.09.2016 | 8.60 | சென்னை விமான நிலையம் முதல் சின்னமலை வரையில் (உயர்த்தப் பட்டவை) |
| | 1.20 | ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையில் (உயர்த்தப்பட்டவை) |
| 14.05.2017 | 7.40 | கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையில் (சுரங்கப்பாதை) |
| 25.05.2018 | 2.50 | நேரு பூங்கா முதல் சென்னை சென்ட்ரல் வரையில் (சுரங்கப்பாதை) |
| | 4.35 | சின்னமலை முதல் ஏஜி-டிஎம் எஸ் வரையில் (சுரங்கப்பாதை) |
| 10.02.2019 | 10.90 | ஏஜி-டிஎம் எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையில் (சுரங்கப்பாதை) |
| 14.02.2021 | 9.05 | வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரை (சுரங்கப்பாதை மற்றும் உயர்த்தப்பட்டவை) |
| **மொத்தம்** | 54.15 | |

கட்டம்-I திட்டமதிப்பீடு ரூ.14,600 கோடியிலிருந்து ரூ.18,379.92 கோடியாக திருத்தியமைக்கப்பட்டு மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் ஒப்புதல் 2021-ல் பெறப்பட்டது. திருத்திய பங்களிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு ரூ.3125.78 கோடியை சமவீத பங்காகவும் (17.00%), ரூ.2752.36 கோடியைச் சார்நிலைக் கடனாகவும் (14.98%) வழங்கியுள்ளது. அதே போன்று ஒன்றிய அரசு, ரூ.3125.78 கோடியை சமவீத பங்காகவும் (17.01%), ரூ.730.00 கோடியைச் சார்நிலைக் கடனாகவும் (3.97%) வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள ரூ.8646.00 கோடியை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனாக நேரடியாக செல்லும் நிதியுதவியாக (pass-through assistance) - 47.04% பெறப்பட்டது.

கட்டம்–I நீட்டிப்பைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு அரசு, ரூ.508.00 கோடியை சமவீத பங்காகவும், ரூ.599.27 கோடியை சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. அதே போன்று, ஒன்றிய அரசு ரூ.508.00 கோடியை சமவீத பங்காகவும், ரூ.205.00 கோடியை சார் நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. ரூ.2141.00 கோடியை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனாக நேரடியாகச் செல்லும் நிதியுதவியாக (pass-through assistance) பெறப்பட்டது.

## 2.2 கட்டம்-I இன் இயக்கங்கள்

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I இன் கீழ், 54.1 கி.மீ நீள வழித்தடங்களில் முழுமையான பயணிகள் சேவை நடைபெற்று வருகின்றது. பெருந்தொற்று மற்றும் அதற்கான கட்டுப்பாடுகள் குறையத் தொடங்கியவுடன், பயணிகள் எண்ணிக்கை, கடந்த சில மாதங்களில் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மேலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், கடைசி மைல் இணைப்பினை மேம்படுத்துதல், தள்ளுபடி கட்டணத்துடன் கூடிய பயண அட்டைகளை அறிமுகம் செய்தல், எளிதில் அணுகும் வகையில் மெட்ரோ நிலையங்களின் மேம்பாடு மற்றும் பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மூலம் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. கத்திப்பாரா நகர்ப்புறச் சதுக்கம் மற்றும் மத்திய சதுக்கம் போன்றவை பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பின் அடையாளங்கள் ஆகும். இதனால் ஒரு போக்குவரத்து அமைப்பிலிருந்து மற்றொரு போக்குவரத்து அமைப்பிற்கு பயணிகள் எளிதாக மாற இயலும். இத்திட்டங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன. கடைசி மைல் இணைப்பினை மேம்படுத்துவதற்காக சிறிய பேருந்துகளின் எண்ணிக்கையை அவற்றின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு

அதிகரிக்கப்படுகிறது. கடைசி மைல் இணைப்பின் இதர முறைகளான மிடுக்கு இருசக்கர வாகனங்கள் (Smart Bikes), உபர் (Uber), ஓலா (Ola), ஷேர் ஆட்டோ (Share Auto) போன்றவை ஊக்குவிக்கப்பட்டு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

## 2.3 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்-கட்டம்-II

மூன்று வழித்தடங்களை உள்ளடக்கிய 107.55 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–II ற்கு 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழக அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதி பங்களிப்பிற்காகவும் இருதரப்பு மற்றும் பன்னாட்டு அமைப்புகளின் நிதியுதவிக்காகவும் பரிந்துரை செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர்ப் பகுதிக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்ட அறிக்கையின் அடிப்படையில், கட்டம் – II இல் உள்ள வழித்தடங்களில் ஒன்றான வழித்தடம்-4ஐ கலங்கரை விளக்கத்திலிருந்து வடபழனி மற்றும் போரூர் வழியாக பூவிருந்தவல்லி வரை நீட்டிப்பதற்கும், திட்டச் செலவினை குறைப்பதற்காக வழித்தடம்-5இல் சில சுரங்கப்பாதை வழித்தடப் பகுதிகளை உயர்த்தப்பட்டவைகளாக மாற்றுவதற்கும் அரசு முடிவு செய்தது. அதனடிப்படையில் ஒரு

ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கை திருவாளர்கள் ரைட்ஸ் (RITES) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

## 2.4 கட்டம்-II திட்டத்திற்கான ஒப்புதல்

மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களுடன் மொத்தம் 118.9 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-IIற்கு கொள்கையளவிலான ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தமிழ்நாடு அரசு வழங்கியது. கட்டம்–IIன் திட்டம் ரூ.69,180 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டு நிதியுதவி மற்றும் வெளிநாட்டு கடனுதவி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது.

இதனிடையே, மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான மதிப்பீட்டு அளவுகோல் (Benchmarking cost) குறித்த வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஆலோசனைகளின் அடிப்படையிலும், ஒன்றிய அரசின் புதிய மெட்ரோ இரயில் கொள்கையின் அடிப்படையிலும், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II இன் செலவு மதிப்பீடு ரூ.61,843 கோடியாகவும், கட்டுமான காலத்திற்கான வட்டி மற்றும் முன் இறுதிக்கட்டணத்தைச் சேர்த்து ரூ.63,246 கோடியாகவும் திருத்தியமைக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சென்னை

மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I ற்கு வழங்கியதைப் போல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-IIற்கும் 50:50 என்ற சமவீதப் பங்களிப்பு அடிப்படையில் ஒப்புதல் வழங்குமாறு ஒன்றிய அரசிடம் கோரப்பட்டுள்ளது. இத்திட்டமானது, இந்தியாவிலேயே ஒரே கட்டத்தில் செயல்படுத்தப்படுகின்ற மிகப்பெரிய மெட்ரோ இரயில் திட்டமாகும்.

2021-2022 ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் வரவு செலவுத் திட்ட உரையில், கட்டம் – II திட்டத்திற்கான நிதி பங்களிப்பு குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, இத்திட்டம் சமபங்களிப்பு முறையில் ஒன்றிய அரசின் திட்டமாக செயல்படுத்த பொது முதலீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆக, ஒன்றிய அரசின் இறுதி ஒப்புதல் தொடர்ந்து எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.5 ஒப்புதலளிக்கப்பட்ட கட்டம்–II வழித்தடங்கள் மற்றும் மெட்ரோ நிலையங்களின் விவரங்கள்

- **வழித்தடம்-3:** மாதவரம் முதல் சிறுசேரி (சிப்காட்) வரையுள்ள (45.8 கி.மீ) - வடக்கு - தெற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில், மென்பொருள் வழித்தடம், அடையார், மயிலை மற்றும் புரசைவாக்கம் போன்ற முக்கியப் பகுதிகள் இணைக்கப்படுகிறது;

- **வழித்தடம்-4**: கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி புறவழிச்சாலையானது (26.1 கி.மீ) கிழக்கு மேற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில் நகரின் வணிகப் பகுதிகளான நந்தனம், தியாகராயநகர், வடபழனி, போரூர் மற்றும் பூவிருந்தவல்லி ஆகியவை இணைக்கப்படுகிறது;

- **வழித்தடம்-5**: மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை (47.0 கி.மீ) - சுற்று வட்ட வழித்தடமான இவ்வழித்தடத்தில் வில்லிவாக்கம், அண்ணாநகர், கோயம்பேடு, விருகம்பாக்கம், இராமாபுரம், மடிப்பாக்கம் மற்றும் மேடவாக்கம் ஆகிய பகுதிகள் இணைக்கப்படுகிறது;

கட்டம்-IIன்கீழ் கருதப்பட்டுள்ள மெட்ரோ இரயில் நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| **வழித்தடங்கள்** | **உயர்த்தப்பட்ட நிலையங்கள்** | **சுரங்கப்பாதை நிலையங்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| வழித்தடம்-3 | 20 | 30 | 50 |
| வழித்தடம்-4 | 18 | 12 | 30 |
| வழித்தடம்-5 | 42 | 6 | 48 |
| **மொத்தம்** | **80** | **48** | **128** |

## 2.6 கட்டம்-II திட்டத்திற்கான நிதி ஒருங்கிணைப்பு

வழித்தடம் -3 இல் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் (35.67கி.மீ), வழித்தடம் -5 இல் மாதவரம் முதல் சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையம் வரையிலும் (16.34கி.மீ) மொத்தம் 52.01 கி.மீ நீள வழித்தடப் பகுதிற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவி இறுதி செய்யப்பட்டுள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையுடன் 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கடன் வழங்க இறுதி செய்யப்பட்டுள்ளது. கடன் தொகையின் முதல் தவணை 75 பில்லியன் 519 மில்லியன் ஜப்பான் யென் ஆகும். இரண்டாவது தவணை கடனான 73 பில்லியன் ஜப்பான் யென்னுக்கும் 31-03-2022 அன்று கையெழுத்தாகியுள்ளது.

கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி புறவழிச்சாலை வரையிலான (26.1 கி.மீ) வழித்தடம்-4, வழித்தடம்-3 இல் சோழிங்கநல்லூர் முதல் சிறுசேரி (சிப்காட்) வரை (10.13 கி.மீ) மற்றும் வழித்தடம்-5 இல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான (30.66 கி.மீ) எஞ்சிய வழித்தடப் பகுதிகளை செயல்படுத்துவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய

உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் நிதியுதவி இறுதி செய்யப்பட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியின் முதல் கடன் தவணையான 350 மில்லியன் டாலருக்கான கடன் ஒப்பந்தம் 29.12.2022 அன்று கையெழுத்தாகியுள்ளது. எஞ்சிய வங்கிகளின் கடன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நடைமுறைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 2.7 கட்டம்-II திட்டத்தை மாநில அரசு திட்டமாக செயல்படுத்துதல்

இத்திட்டத்தில் ஒன்றிய அரசு பங்கேற்கும் வரையில், இத்திட்டத்தை மாநில அரசு திட்டமாகக் கருதி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியளிக்கும் வழித்தடப் பகுதிகளை செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாநில அரசு வழங்கியது. ஒன்றிய அரசு பின்னர் இத்திட்டத்தில் பங்கேற்கும் வகையில், தற்காலிகமாக மாநில அரசு திட்டமாகக் கருதி, 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், வழித்தடம்-4 முழுமையாகவும் வழித்தடம்-3 மற்றும் வழித்தடம்-5 இல் எஞ்சிய வழித்தடப் பகுதிகளையும் செயல்படுத்துவதற்காக அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் ஒன்றிய அரசு இந்த திட்டத்தில் பங்கேற்பதற்கு எந்த தடையும் இருக்காது.

கட்டம்-II திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.1500 கோடியை பங்கு மூலதனமாகவும், ரூ.7100 கோடியை சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மாநில அரசின் நிதியுதவியுடன் மண் பரிசோதனை மற்றும் விரிவான வடிவமைப்பு தயாரிப்புப் பணிகளை முடித்துள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கட்டம்-I ஐ வெற்றிகரமாக செயல்படுத்தியதன் வாயிலாக கிடைக்கப் பெற்ற ஒட்டுமொத்த அனுபவத்தின் அடிப்படையில், மெட்ரோ நிலையங்களின் அளவினை சீரமைத்தல், நடைமேடை நீளம், காற்றுப் போக்கி அமைப்புகள் போன்றவற்றில் பல்வேறு புத்தாக்க வடிமைப்புகளை சட்டபூர்வமான அளவுகோலுக்கு குந்தகம் இன்றி அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புத்தாக்கங்கள் இந்தியாவில் உருவாகிக் கொண்டிருக்கும் ஏனைய மெட்ரோ இரயில் நிறுவனங்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. அனைத்து நிலையங்களும், மாற்றுத் திறனாளிக்கு உகந்த வகையிலும் இந்திய பசுமை கட்டிட குழுமத்தின் பசுமைக் கட்டிட அளவுகோலின் படியும், அதாவது சமூக மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளன.

மொத்த நீளமான 118.9 கி.மீ வழித்தடப் பகுதிகளில் கட்டுமானப் பணிகள் துவக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி, சீராக முன்னேறி வருகின்றன. கட்டுமான காலத்தின் போது நகரக்குடிமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கும் வகையிலும், பாதுகாப்பு அம்சங்களை உறுதி செய்யும் வகையிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது.

## 2.8 கட்டம்-I இன் நீட்டிப்பு – விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை

தமிழ்நாட்டின் தென்பகுதிகளின் நுழைவாயிலான ஜி.எஸ்.டி சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், உருவாகி வரும் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திற்கு போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்துவதற்கும் சென்னை மெட்ரோ இரயில் வழித்தடம்-1 ஐ விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு / விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு அரசு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. திருவாளர்கள் ஏஇகாம் (M/s. AECOM) நிறுவனம் தயாரித்தளித்த விரிவான திட்ட அறிக்கை, ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காகவும்,

இருதரப்பு / பன்னாட்டு வங்கிகளின் வெளிநாட்டு நிதியுதவிக்கு பரிந்துரைப்பதற்காக தற்போது மாநில அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**கட்டம்-II வழித்தட நீட்டிப்புகள்**

கீழ்க்கண்ட கட்டம்-II வழித்தடங்களை நீட்டிப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தயாரிப்பதற்கான ஆணைகளை ஜுலை 2022இல் அரசு வெளியிட்டுள்ளது.

- **வழித்தடம்-3**ஐ சிறுசேரியிலிருந்து கேளம்பாக்கம் வரை நீட்டித்தல்.
- **வழித்தடம்-3**ஐ கேளம்பாக்கத்திலிருந்து மாம்பாக்கம் மற்றும் வண்டலூர் வழியாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வரை நீட்டித்தல்.
- **வழித்தடம்-4**ஐ பூவிருந்தவல்லி புறவழிச் சாலையிலிருந்து திருப்பெரும்புதூர் வரை நீட்டித்தல்.
- **வழித்தடம்-5**ஐ திருமங்கலத்திலிருந்து முகப்பேர் மற்றும் அம்பத்தூர் வழியாக ஆவடி வரை நீட்டித்தல்.

விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிப்பதற்கான ஆலோசகர் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு,

டிசம்பர் 2022 இல் ஒப்பந்த ஏற்பு கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. சாத்தியக்கூறு ஆய்வுகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**3. இரண்டாம் நிலை நகரங்களின் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டங்கள்**

இரண்டாம் நிலை நகரங்களில் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசல் மற்றும் போக்குவரத்து தேவைகளுக்கான தீர்வாக கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி நகரங்களில் ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புகளைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டங்களின் (Comprehensive Mobility Plans) அடிப்படையில் விரிவான சாத்தியக்கூறு / விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

**3.1 கோயம்புத்தூர் பெருந்திரள் துரிதப் போக்குவரத்துத் திட்டம்**

கோயம்புத்தூர் நகருக்கான பெருந்திரள் துரிதப் போக்குவரத்துத் திட்டத்திற்கான விரிவான சாத்தியக்கூறு

அறிக்கை / விரிவான திட்ட அறிக்கையை ஜெர்மானிய நாட்டின் நிதியுதவி முகமையான கே.எப்.டபுள்யூ-வின் (KfW) நிதியுதவியுடன் தயாரிப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அறிக்கைகள் தயாரிக்கும் பணி திருவாளர்கள் சிஸ்ட்ரா (SYSTRA) மற்றும் ரைட்ஸ் (RITES) கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்டுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கைக்கு ஜூலை 2021ல் வழங்கப்பட்ட ஒப்புதலின் அடிப்படையில், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆலோசகர்கள் இத்திட்டத்தை 3 கட்டங்களாக செயல்படுத்த பரிந்துரைத்துள்ளனர். கட்டம்-I ற்கான விரிவான திட்ட அறிக்கை மாநில அரசால் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது மொத்தம் 40 கி.மீ நீளத்தில் இரண்டு மெட்ரோ இரயில் வழித்தடங்களை செயல்படுத்தலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கைக்கு மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. இறுதியான விரிவான திட்ட அறிக்கை ஏப்ரல் 2023இல் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 3.2 மதுரையில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டம்

மதுரை நகரில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பினை ஏற்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணியை சென்னை மெட்ரோ இரயில்

நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கான ஆணைகளை ஆகஸ்ட் 2021இல் அரசு வெளியிட்டுள்ளது. அரசு ஆணைகளின் அடிப்படையிலும் ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டம் இருப்பதன் அடிப்படையிலும், இந்த ஆய்வு திருவாளர்கள் பாலாஜி இரயில் ரோடு அமைப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசால் டிசம்பர், 2022இல் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது 29 கி.மீ நீளத்திலான வழித்தடத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை மே 2023 இல் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 3.3 சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வெலி நகரங்களில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்துத் திட்டம்

**சேலம்**, **திருச்சிராப்பள்ளி** மற்றும் **திருநெல்வேலி**யில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து திட்டங்களை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கைகளை தயாரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நகரங்களுக்காக ஒருங்கிணைந்த நகர்வுத் திட்ட அறிக்கைகளின் அடிப்படையில் சாத்தியக் கூறு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த நகரங்களுக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டத்தை மேம்படுத்துதல் / தயாரித்தல் பணிகள் தமிழ்நாடு நகர்ப்புற

உட்கட்டமைப்பு சேவைகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இறுதியான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டங்கள் விரைவில் தயாராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், செப்டம்பர் 2022இல் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிப்பதற்கான ஆலோசகர் நிறுவனங்களுக்கு ஒப்பந்த ஏற்புக் கடிதங்களை வழங்கியுள்ளது. சாத்தியக்கூறு ஆய்வறிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**முனைவர் பழனிவேல் தியாக ராஜன்**

**நிதி மற்றும் மனிதவள**

**மேலாண்மைத் துறை அமைச்சர்.**




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 04.03.2023 அன்று தலைமைச் செயலகத்தில், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை சார்பில் நீடித்த வளர்ச்சி இலக்கின் இலச்சினையை வெளியிட்டார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 04.03.2023 அன்று தலைமைச் செயலகத்தில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை சார்பில் 2030-ஆம் ஆண்டுக்குள் நீடித்த வளர்ச்சி இலக்குகளை தமிழ்நாட்டில் முழுவதுமாக அடையும் வண்ணம் அரசின் செயல்பாடுகளை வெளிப்படுத்தும் விதமாக நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொடர்பான புத்தகங்களை வெளியிட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரும், தமிழ்நாடு மாநில திட்டக் குழுத் தலைவருமான திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 12.08.2022 அன்று சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் மாநில திட்டக்குழுவின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.




தொழில்மயமாக்கல் கொள்கை, தமிழ்நாடு சுகாதார உரிமைக்கான நலக்கொள்கை, திருநர்+ கொள்கை ஆகிய மூன்று வரைவு கொள்கைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு 27.10.2022 அன்று மாநில திட்டக் குழு துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை 21.03.2023 அன்று தலைமைச் செயலகத்தில், நித்தி ஆயோக் அமைப்பின் துணைத் தலைவர் திரு.சுமன் குமார் பெர்ரி மற்றும் உயர் அலுவலர்கள் குழு சந்தித்து, அவ்வமைப்பின் முக்கிய முயற்சிகளான நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் முன்னேற விழையும் மாவட்ட திட்டம் (Aspirational Districts) ஆகியன குறித்து கலந்தாலோசித்தனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.03.2022 அன்று தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் நிதி உதவி அளிக்கப்பட்ட எல்.இ.டி. விளக்குகள் மற்றும் பொருத்திகளுக்கான பிரத்யேக சோதனை கூடத்தினை திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் கிராமத்தில் துவக்கி வைத்தார்.



நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைப்பாங்கான பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நோக்கத்துடன் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் மற்றும் இன்ட்கோசர்வ் மூலம் விற்கப்படும் பிற பொருட்களை சந்தைப்படுத்தவும், 20 எண்ணிக்கையிலான தேயிலை விற்பனை வாகனங்கள் ரூ.3.096 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.12.2021 அன்று துவக்கி வைக்கப்பட்டது.




11.10.2022 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அவர்கள், தமிழ்நாட்டின் குடும்ப நிலவரங்களின் தொடர் கணக்கெடுப்பு (TNPHS) அடிப்படை ஆய்விற்கு முந்தைய ஆய்வின் (2018-19) சுருக்க அறிக்கையை (Pre Baseline Survey) வெளியிட்டார்.




29.12.2022 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் தலைமையில் “பெரிய உள்கட்டமைப்பு திட்டங்கள்” தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.



19.12.2022 அன்று உதகமண்டலத்தில் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களால் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள் குறித்த களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் – கோமுகி அணை – பழங்குடியினர் நல உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி – 16 வகுப்பறைக் கட்டிடம் (மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் கட்டப்பட்டது)









தமிழ்நாடு புத்தாக்க முயற்சி திட்டத்தின்கீழ், 400 மொத்த பால் சேகரிப்பு மையங்களில் கொள்முதல், பரிசோதனை மற்றும் குளிரூட்டல் வாயிலாக பால் உற்பத்தி மற்றும் விநியோகத்தை உறுதி செய்வதற்கான தொலை உணர்வு கண்காணிப்பு அமைப்பை நிறுவுதல்.



பொதுப்பயிர் மதிப்பீட்டு ஆய்வு திட்டம்
களப்பயிற்சி ஆய்வு



பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் – இராமநாதபுரம் மாவட்டம் – வாழைப்பயிர் அறுவடை பரிசோதனை

இயற்கை வழி சிறுதானிய உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டல் வாயிலாக ஊட்டச்சத்து பாதுகாப்பையும், வாழ்வாதார மேம்பாட்டையும் அளித்தல் மற்றும் ஊட்டச்சத்து மிக்க தானியங்கள் உண்பதை ஊக்குவித்தல் – திட்டச் செயல்பாடு வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம் (மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் செயல்படுத்தப்பட்டது)



சிறுதானியம் தூய்மை செய்யும் இயந்திரத்தை இயக்கும் பெண்



காகிதப்பைகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள சிறுதானியங்கள்





சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – கட்டம் - I – உயர்த்தப்பட்ட இரண்டு மெட்ரோ இரயில் வழித்தடங்கள் கத்திப்பாரா மேம்பாலத்திற்கு மேல் செல்லும் காட்சி



சென்னை மெட்ரோ இரயில் திட்டம் – கட்டம் -I – சுரங்கப்பாதையில் மெட்ரோ இரயில் செல்லும் காட்சி

எல்லோருக்கும் எல்லாமும்

SUSTAINABLE DEVELOPMENT GOALS
TAMIL NADU

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.